1999 இதழ் 3 பகுதி 1

# சுகம்



## இளம் மொட்டுக்களை நசுக்காதீர்

A Health Education Bureau Publication Sponsored by Unicef
யுனிசெப் ஆதரவுடன் சுகாதாரக் கல்விப் பணிமனையின் வெளியீடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுகம்

1993 4 வது பாகம் வெளியீடு 1

சுகாதார மற்றும் தேசிய வைத்திய அமைச்சின், சுகாதாரக் கல்விப் பிரிவின் வெளியீடு.


ஆலோசனை

டாக்டர் லதா ஹப்புகொட
பணிப்பாளர்
சுகாதாரக் கல்விப் பிரச்சாரப்

E.A. ரணவீர
பிரதிப் பணிப்பாளர்
சுகாதாரக் கல்வி பணியகம்

A. நிஸார்
தலைமை அதிகாரி - யுனிசெப்

டாக்டர்
லக்ஷ்மன் அபேகுணவர்தன
திட்டமிடல் அதிகாரி, யுனிசெப்

பிரதம தொகுப்பாளர்
துசித மலலசேகர

தொகுப்பு உதவி
சென். திலகவர்தன
கல்யாணி புலத்சிங்ஹள

தமிழ்த் தொகுப்பு உதவி. டாக்டர்
ம. யோகவிநாயகம்,
M. M. தாஹா

சுகாதார மற்றும் தேசிய வைத்திய அமைச்சின் சுகாதாரக் கல்விப் பிரிவின் பிரசுரம் ... பொது சுகாதார ... வெளியீட்டு ... ஆக்கங்கள் ... இவ் ... கருத்துக்கள் ... அனுப்ப வேண்டும்.


யுனிசெப் அனுசரணையுடன் அச்சிடப்பட்டது

புகைப்படம் - சரத் ...
கணினி பட அமைப்பு - ...


குறிக்கோள்














பொருளடக்கம் பக்கம்


பிள்ளை மொட்டுக்களை அழிக்காதீர் - துசித மலலசேகர 01

சிறுவர் துஷ்பிரயோகம் ஒரு சுகாதாரப் பிரச்சினை
... ஆரம்ப ... நேரு ... சுரேந்திர த சில்வா 03

சிறுவர் துஷ்பிரயோகங்களும் சிகிச்சை அவற்றின் பலன்களும்
... மாதசிங்க 05

சிறுவர் துஷ்பிரயோக நிலைமை இனங்காண்போம்
... நிஷாமால் குணவர்தன 07

சிறுவர் உரிமைகள்
தொடர்பான விதிகளில் அடிப்படைக் குறிப்புகள் - யுனிசெப் 09

பாலியல் வர்த்தகத்துறைக்குச் சிறுவர்களைப் பயன்படுத்தல்
யுனிசெப் 10

சிறுவர் உரிமைகள் பற்றிய சாசனம் மற்றும் சிறுவர்களைப் பாலியல் துஷ்பிரயோகத்தில் ஈடுபடுத்தல் - யுனிசெப் 11

சிறுவர் துஷ்பிரயோகமும் இலங்கைச் சமுதாய சீர்கேடுகளும்
... சுகாதாரக் கல்வி அதிகாரி ... 13

சிறுவர் துஷ்பிரயோகத்தைத் தடுப்பதற்கான முழுமையான வேலைத்திட்டம் ஒன்றுவேண்டும்
... 17

சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை
சிறுவர் வைத்திய ... சிறுவர் பாதுகாப்பு 20

கிராம மட்டத்தில் சிறுவர் துஷ்பிரயோகங்களைத் தடுப்போம் - ... 21

சிறுவர்களைத் தவறான ... பாலியலில் ஈடுபடுத்துவது தொடர்பாக தெரிந்து கொள்ள வேண்டிய விடயங்கள் 22



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிஞ்சு மொட்டுக்களை அழிக்காதீர்

துசித மல்லசேகர

**இளஞ்சிறார்களின் பிஞ்சு உள்ளங்களில் வாழ்க்கையிலே மறக்க முடியாத சம்பவங்கள் பதிந்துவிடுகின்றன. இளமை, நடுத்தர வயதினர் மாத்திரமல்ல வயோதிபரான பின்பும்கூட சிறுவயதிலே பெற்ற பல்வேறுபட்ட அநுபவங்களை ஞாபகப்படுத்தி மகிழ்ச்சியடையக் கூடியதாகவிருக்கும்**

சிறுவயதிற் பெற்ற இனிப்பான நிகழ்வுகள் வாழ்நாள் பூராவும் ஞாபகத்தில் இருப்பது போன்றே, ஏதேனும் கசப்பான சம்பவங்கள் இருப்பினும் அவைகளும் வாழ்நாள் பூராகவும் வேதனையைத் தரக்கூடிய நிகழ்வாகவும் இருக்கும்.

சிறு பிள்ளைகளைத் துஷ்பிரயோகஞ் செய்து, சித்திரவதை செய்வது சிறுவர் வாழ்விலே மறக்க முடியாத அநுபவமாகும்.

நாளுக்கு நாள் மாறுபட்டு வரும், ஆசைகள், எதிர்பார்ப்புக்கள் அதிகரித்துக்கொண்டுவரும் சமூகத்திலே சிறுவர்கள் மூலம் தமது இழிவான இச்சைகளைப் பூர்த்திசெய்துகொள்ளும் வளர்ந்தோர்கள் அதிலே எவ்வாறான திருப்தியைப் பெற்றபோதிலும் அப்பாவிச் சிறார்களின் வாழ்க்கையில் அவல நிலையை உண்டு பண்ணுகின்றனர்.

ஆண், பெண், வயது, இனம், பணக்காரர் போன்ற எதுவித ஏற்றத்தாழ்வுமின்றி எந்த ஒரு பிள்ளையையும், துன்புறுத்தலுக்கோ துர்நடத்தைக்கோ உள்ளாக்க முடியும். ஆனால், பாதிப்படையும் பெண் பிள்ளைகளின் நிலைமை மேலும், மோசமானதாயமையும் அதனால் அவர்களின் வாழ்வு இருள்மயமாகவும் ஆகலாம். அநேகமாக பிள்ளைகளுக்கு துன்பத்தை ஏற்படுத்துவதும், அவர்களைத் துஷ்பிரயோகத்திற்கு ஆளாக்குவதும் யார்?

அநேகமாக இவ்வாறான செயற்பாடுகள், கண்டிக்கனம் செய்வோர், அல்லது வெளி நபர்கள் மூலமே ஏற்படுகிறதென நாம் நினைக்கிறோம். ஆனால் அவ்வாறான கருத்து தவறானது. அநேகமான பிள்ளைகள் பாலியல் துஷ்பிரயோகத்திற்கு ஆளாவது தமது நெருங்கிய உறவினர் மூலமே. தந்தையால் கெடுக்கப்பட்ட பெண்பிள்ளைகளும் உள்ளனர். அதே போல மாமா, பாட்டன், சிறியதகப்பன், சகோதரர், மைத்துனன்மார், போன்ற நெருங்கிய உறவினர்களும் மற்றும் அடிக்கடி வீட்டுக்கு வருகைதரும் அயலவர்களும், விசேடமாக குடும்ப நண்பர்கள், அல்லது அண்மையிலுள்ள வியாபாரி போன்றோரினால் பிள்ளைகள் இவ்வாறான நிலைக்கு ஆளாகின்றனர். பாலியல் துஷ்பிரயோகங்களுக்கும் பயன்படுத்தப்படுவர்.

வியாபார மட்டத்தில் துஷ்பிரயோகங்கள் உள்நாட்டு, வெளிநாட்டு உல்லாசப் பிரயாணிகள் மூலம் நடைபெறுகிறதென்றே குறிப்பிட வேண்டும். பிள்ளைகளுக்கு ஏற்படும் பாதிப்புக்கள் எவையென்பதைப் பார்ப்போம்.

இவை மூன்று வகையாக ஏற்படும். உடல்; உள மற்றும் பாலியல் போன்றவையாம். சிலசமயங்களில் ஒரே பிள்ளையே இம்மூன்று வகையிலும் பாதிப்படையலாம்.

முதலில் உடல் ரீதியான இம்சைகளை அவதானிப்போம். பிறர் மூலம் தொடர்ச்சியாக, குறிப்பாக அடித்தல், உலுக்குதல், முக்குதல், கிள்ளுதல், சுடுதல். முகத்தினுறை உண்டுபண்ணல். கட்டி வைத்தல் கடுமையான தண்டனை வழங்குதல் போன்றவை முக்கியமானதாகும்.

வியாபார மட்டத்தில் துஷ்பிரயோகங்கள் உள்நாட்டு வெளிநாட்டு உல்லாசப் பிரயாணிகள் மூலம் நடைபெறுகிறதென்றே குறிப்பிட வேண்டும். பிள்ளைகளுக்கு ஏற்படும் பாதிப்புகள் எவையென்பதைப் பார்ப்போம்.

பிள்ளைகளின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்யாதிருப்பது: உணவுகளை வழங்காமை. உரிய வீடு. நித்திரை செய்வதற்கும் இடமில்லாமை. குளிக்கவோ, ஆடைகளைச் சுத்தஞ் செய்வதற்கோ இடமளிக்காமை போன்றவைகளும் உடல் ரீதியான இம்சையாகவே கணிக்கப்படும். சிறுபராயத்தில் உளரீதியில் இம்சைப்படுத்தப்படுவதனால், பிள்ளையின் சமுதாய, உளரீதியான முன்னேற்றத்திற்குப் பங்கம் ஏற்படுவதோடு நடத்தைமாறாட்டங்களுக்கும் ஆளாவர்.

தொடர்ச்சியாகத் திட்டுதல், சமயமிடல் அவமானப்படுத்துதல், அநாவசியமாக விமர்சித்தல், சமவயதினருடனான தொடர்புகளைத் தடுத்தல், அடிப்பதாகப் பயமுறுத்துதல், அறையிலிட்டுப் பூட்டுதல், குற்றஞ் செய்யத் தூண்டுதல் போன்ற காரணங்களினால் பிள்ளைகள் உளரீதியாக இம்சைப்படுத்தப் படுகின்றனர்.

உடல், உள ரீதியான இம்சைபடுத்தப் படுகின்ற பிள்ளைகளின் எதிர்கால வாழ்வின் முன்னேற்றத்திற்குத் தடையாக அமையும். இவ்விரண்டு வகைகளையும் விட பாலியல் ரீதியான இம்சை அவர்களின் வாழ்விலே பாரிய பாதிப்பை ஏற்படுத்தும்.

பிள்ளைகளின் வயதிற்குப் பொருத்தமற்றவாறு, துஷ்பிரயோகஞ் செய்வது, அல்லது பாலியல் உறவில் ஈடுபடுத்துவது. பாலியல் இம்சையெனப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


பிள்ளைகளுக்கு தமது பாலுறுப்புகளைக் காட்டுவது, பிள்ளைகளின் பாலுறுப்புக்களை பார்ப்பது, இன்பத்திற்காகத் தடவுவது, கொஞ்சுவது, பாலியல் தொடர்புபட்ட படங்களைப் பார்ப்பதற்கு பிள்ளைகளை ஊக்குவிப்பது, பிள்ளைகள் குளிக்கும் போது பார்த்துக் கொண்டிருப்பது, பாலியல் செயற்பாட்டிற்காக யோனி, குதம், வாய் போன்றவற்றைப் பயன்படுத்துவது போன்ற செயல்கள் பாலியல் இம்சையாக கணிக்கப்படும். இதற்கு ஆளான பிள்ளைகள் பாரிய அளவிலே உளஆடிப்படையிலும், நடத்தையிலும் பாதிப்படைவர். ஆனால் இவ்வாறான பாலியல் ரீதியில் இம்சை படுத்தப்பட்ட பிள்ளைகள் பல்வேறு காரணங்களால் அதனை வெளிப்படுத்த மாட்டார்கள்.

பாலியல் துஷ்பிரயோகங்களுக்காக பிள்ளைகளைப் பயன்படுத்துவோர் உடனடியாக அச்செயலைச் செய்யமாட்டார்கள். அவர்கள் தம்மீது நம்பிக்கை வைக்குமளவிற்குப் பழகுவார்கள். பாலியல் தொடர்பு கொள்வதற்கு முன்பு அதைப்பற்றிப் பிறரிடம் கூறாதிருப்பதற்காகப் பயமுறுத்தியோ அல்லது இனிப்புப்பண்டங்களை போன்ற பரிசில்களை வழங்கியோ, அவர்களை அச்செயற்பாட்டிற்கு இணங்க வைப்பார்கள். இன்னும் சிலர் பாதிப்புற்ற பிள்ளைகள் முதியோரிடமுள்ள பயத்தினாலோ, அல்லது தனக்கு ஏற்படக்கூடிய வெட்கம் காரணமாகவோ வெளியாட்களிடம் சொல்லாதிருப்போருமுளர்.

ஏதேனும் துஷ்பிரயோகத்திற்கு ஆளாகிய, கசப்பான அனுபவங்களைப் பெற்ற பிள்ளைகள் தமக்கு ஏதேனும் உதவி, ஒத்தாசை கிடைக்குமென்ற நம்பிக்கை ஏற்பட்டால் மாத்திரமே பிறருக்கு அதைப்பற்றிக் கூறுவர். ஆகவே அவ்வாறான பாதிப்புக்களை பற்றி ஏதேனும் அறிகுறிகள் தென்பட்டால் அமைதியாகச் செயற்படவும். நடைபெற்ற சம்பவத்திற்கு பிள்ளையிடம் கோபப்படலாகாது.

சிலவேளை தங்களின் கோபம் பிள்ளையின் மேல் ஏற்பட்டதாக அவன் கருதுவான். எனவே கோபமுண்டான போது, அல்லது வெறுப்பு ஏற்பட்டபோதோ, அதனை வெளிக்காட்டாது அமைதியாகக் கேட்டு அறிந்து கொள்ளவும். பிள்ளையின்மீது நம்பிக்கை வைக்கவும். பாலியல் துஷ்பிரயோகங்களுக்கு ஆளான பிள்ளைகள் நடந்த உண்மைகளைக் கூறுவர். எதனையும் மறைக்க மாட்டார்கள். பிள்ளைகளின் பிழையைச் சுட்டிக்காட்ட முற்படவேண்டாம். ''ஆம் என்ன செய்வது உங்கள் மேல் தப்பில்லை'' போன்ற கூற்றுக்களால் பிள்ளையை தேற்றலாம் பிள்ளை ஏதேனும் கேள்வி கேட்டால் மறைக்காது விடையளிக்கவும்.

இவ்வாறான பிள்ளைகளில் காணக்கூடிய அறிகுறிகள் அடிக்கடி தலைவலி, வயிற்றுவலி, வயிற்றெரிவு, தூக்கமின்மை, உணவில் வெறுப்பு போன்ற அறிகுறிகளைக் காணலாம். சிலர் அடிக்கடி குளிப்பர்.



அல்லது உடலைக் கழுவுவர். இன்னும் சிலர் தமது சுத்தம்பற்றி கவனியாது இருப்பர். துன்புறுத்தல்களிலிருந்து தம்மைப் பாதுகாத்துக் கொள்வதற்கு தமது நெருங்கிய உறவினர் அல்லது பெற்றோரினது ஆதரவை நாடுவர். அதேபோல் மது, அல்லது போதைவஸ்துப் பாவனைக்கு அடிமையாவர். இவ்வாறான அறிகுறிகளைக் காணக்கூடிய பிள்ளைகளிடம் அதிக கவனத்தைச் செலுத்துவது அவசியம்.

துஷ்பிரயோகங்களுக்கு, விசேடமாக பாலியல் துஷ்பிரயோகங்களுக்கு ஆளாகாத விதத்தில் பிள்ளைகளைப் பாதுகாப்பது, பெற்றோரின் கடமையாகும். நீங்கள், மற்றும் உங்களின் பராமரிப்பிலுள்ள பிள்ளைகளை நேர்மையான பிள்ளைகளாகக் காண்பிக்கவும். அவர்கள் மேல் அன்பு செலுத்துவதாகவும், மதிப்பதாகவும், பாதுகாப்பளிப்பதாகவும் அவர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு செயற்படுங்கள். அவ்வாறிருக்கும்போது, அவர்கள் மற்றவரின் துணையை நாட மாட்டார்கள்.

பாதுகாப்பானது, அல்லது பொருத்த மற்ற ஸ்பரிசங்கள் எவை என்பதை அவர்களுக்குப் புரியவைக்கவும். வெளியாட்களால் தமது தொடைகள், பாலுறுப்புகள், அக்குள் பகுதி, மார்பகங்களைத் தொடுவது பொருத்தமற்ற செயல்கள் என்பதைப் பிள்ளைகளுக்குப் புரியவைத்தல் வேண்டும். மனித உடலுறுப்புகள் தொடர்பாக பூரண விளக்கங்களை பிள்ளைகளுக்கு அளித்தல் வேண்டும்.

அறிமுகமற்ற ஒருவர் மட்டுமல்லாது நெருங்கிய உறவினராயினும், பெண் பிள்ளைகள் மீது அதிக அக்கறை காட்டுவாராயின், அதனில் கூடிய கவனத்தைச் செலுத்தவேண்டும். எவ்வளவுதான் நெருங்கிய உறவினராயினும், கூடிய நேரம் பெண் பிள்ளைகளை மடியிலே இருத்தி வைத்துக் கொள்ள இடமளிக்கவேண்டாம். பிள்ளை அவர்கள் வீட்டை நாடி படிக்கவோ, அல்லது விளையாடவோ செல்வாராயின் அதைப்பற்றி கூடிய கவனத்தைச் செலுத்துதல் வேண்டும். வளர்ந்த பெண் பிள்ளைகள் இல்லாத வீடுகளுக்குப் பெண் பிள்ளைகளை அனுப்புவதை தவிர்த்துக் கொள்ளல் வேண்டும்.

எல்லா ஆண்களும் பெண்களைப் பலி கொள்வார்கள் என கருதுவது அவசியமில்லா விட்டாலும், எக்காரணத்தைக் கொண்டும் ஆண்கள் மாத்திரம் இருக்கும் இடங்களுக்குப் பெண் பிள்ளைகளை அனுப்பவேண்டாம்.

படிக்க, விளையாட அல்லது நடனமாட அல்லது வேறு வகுப்புகளுக்கோ பிள்ளைகளைத் தனியாக அனுப்பவேண்டாம். விசேடமாக ஆள் நடமாட்டமற்ற பாதைகளில் ஒரு போதும் தனியாக அனுப்புதலாகாது.

பிள்ளைகளின் ஆடைகளிலே அதிக கவனத்தைச் செலுத்தவேண்டும். உடலுறுப்புகள் வெளியே தெரியக்கூடிய சிறிய உடைகளை அணியவிட வேண்டாம். சகல பிள்ளைகளுக்கும் அவர்களது உடலைப்பற்றி புரியவைக்கவும். அது தமக்குரியதே ஒழிய பிறரின்

8 →

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர் துஷ்பிரயோகம் ஒரு சுகாதாரப் பிரச்சினை

சிறுவர் பாதுகாப்புபற்றிய ஜனாதிபதி செயலணிக் குழுவின் தலைவர், சிறுவர் நோய் நிபுணர், பேராசிரியர் **ஹரேந்திர த சில்வா.**



சிறுவர்களைத் துன்புறுத்தல், அவர்களைப் பாலியல் வல்லுறவில் ஈடுபடுத்தல் இன்று நினைக்க முடியாத அளவுக்கு தீவிரமடைந்துள்ளது. அவ்வாறு உள்ளதென மென்மேலும் ஏற்றுக்கொள்ளக்கூடியதெனத் தெரியவருகிறது. இதனாலே துர்அதிர்ஷ்டவசமாக இந்நிலையைக் கட்டுப்படுத்த வேண்டிய அவசிய நிலையில் இன்று நாம் நிற்கிறோம்.

### சிறுவர் துஷ்பிரயோகம்

பிள்ளைகளின் சுகாதாரத்திற்கும் முன்னேற்றத்திற்கும் பாதிப்பை நிச்சயமாக ஏற்படுத்தக் கூடியவாறு அநாவசியமாக துன்பத்திற்குள்ளாகுவதோ அல்லது சிறார்களின் தேவைகளை நிறைவேற்றலைத் தவிர்ப்பதையும் சிறுவர் துஷ்பிரயோகமெனக் கூறலாம். இதனைப் பல வகையாகப் பிரிக்கலாம்.

- உடல் ரீதியான துஷ்பிரயோகம்
- போஷாக்குத் தன்மையைக் கவனியாதிருத்தல்
- பாலியல் வல்லுறவு
- போதைப்படுத்துவதும் மருந்து கொடுத்தலும்
- ஏனையோர்களுக்காகப் பொய்பேசவைப்பது
- வைத்திய சிகிச்சையைப் பெற்றுக் கொடுக்காமை
- நோயிருப்பதாகப் பொய் கூறவைப்பது
- உளரீதியான பாதிப்பை ஏற்படுத்தல்
- வேலைக்கமர்த்துதல்
- யுத்தத்திற்குப் பயன்படுத்துதல்
- கைவிடுதல்
- வணிக தேவைகளுக்காகப் பயன்படுத்தல்
- பணத்திற்கு அல்லது பண்டமாற்றாக விற்பனை செய்தல்

இலங்கையில் உண்மையாகவே சிறுவர் துஷ்பிரயோகம் பிரச்சினையாக உள்ளதா? அல்லது இல்லாத ஒரு பிரச்சினையைப் பெரிதாகக் கருதுகின்றோமா. தேசிய மட்டத்திலான அறிக்கைகளை ஆராயும் போது இலங்கை ஏதோ ஒருமட்டத்தில் இருக்கிறதென ஏற்றுக் கொள்ள நேரிடும் ஆனால் இந்த அறிக்கைகள் மாத்திரம் போதுமானதா? மிக நெருக்கமான சம்பவங்களைத் தவிர ஏனைய நிகழ்வுகள் பத்திரிகைகளில் வெளிவருவதில்லை அநேகமாக இவை சட்டத்திற்கு முன்னாலும் வருவதில்லை. எனவே இவ்வறிக்கைகள் கடலில் மூழ்கிய பனிப் பாறையின் உச்சிப் பகுதி போல தெரிகிறது. பாரிய பகுதி மூழ்கியது.

### உடல் ரீதியான துஷ்பிரயோகம்

அநேகமாக வெளிவராவிட்டாலும் பாரிய அளவிலே காணப்படுவது சிறுவர் உடல் துஷ்பிரயோகமாகும். இதனால் ஏற்படும் காயங்கள் தொடர்பாக அறிக்கைகள் வெளிவர மாட்டாது. அநேகமாக ஏற்பட்டுள்ள காயங்கள் பெரிதாக இருக்கவும் முடியும். அதுமாத்திரமல்லாது, இவற்றிற்கு சிகிச்சை பெற்றுக் கொள்வதும் தாமதமாகவே.

பிள்ளைகளைத் துன்புறுத்துவது நெருங்கிய பாதுகாவலர் அல்லது தாயின் "ஆண் நண்பர்களாலோ" சிலவேளை வெளியாட்களிடமிருந்து அல்லது தனது சகோதரர்களிடமிருந்தும் துஷ்பிரயோகத்திற்குள்ளாகலாம்.

பகல் இல்லங்கள், சமுதாய நிலையங்களிலும் சிறுவர் உடற்துஷ்பிரயோகத்திற்காளாகுவதைக் காணக் கூடியதாயுள்ளது.

குடும்பப்பிரச்சினைகள், பொருளாதார நெருக்கடி, வளங்களின் குறைவு போன்றவற்றினாலும் துஷ்பிரயோகங்கள் அதிகரிக்கலாம். அதுமட்டுமல்ல, தாக்குதல்களுக்கு ஆளாகியவர்கள் போதை, குடிக்குப் பழக்கப்பட்ட பெற்றோர்களினதும், சிறுவயதில் துஷ்பிரயோகத்திற்கு ஆளான பெற்றோர்களின் பிள்ளைகளும், துஷ்பிரயோகத்திற்கு ஆளாகலாம். பொதுவாக உளரீதியாகப் பாதிப்புற்றவர்கள், அல்லது கோபத்துடன் திருப்தியற்ற நிலையில் வாழ்கின்ற பெரியோர்களினால், துஷ்பிரயோகம் ஏற்படலாம். அநேகமாகப் பிள்ளையின் திமிர்குழப்படியைக் கண்டு உடனடியாகக் கோபப்பட்டுச் செய்யும் தாக்குதல்கள் துஷ்பிரயோகத்திற்கான அடிப்படைக் காரணங்களாகும்.

### உடல் துஷ்பிரயோகத்திற்குள்ளான பிள்ளைகளிடம் காணக்கூடிய காயங்கள்

- கிழிவு காயங்கள் - விசேடமாக முதுகின் கீழ்ப்பகுதி, பெருந்தொடைப் பகுதி, கன்னம், கழுத்து, கை, விரல்களில் ஏற்படும் கிழிவு, கீறல்கள்.
- வெடிப்பு - விசேடமாக மேலுதட்டில் (அழும் பிள்ளையின் வாயை மூடுவதால் இது ஏற்படும்)
- கடித்தல்
- சுடுதல் - சிகரட், விறகுக் கொள்ளி மூலம் இரும்பின் சுடுதல் சுடுநீரில் இடுதல்
- கண் சிவத்தல் - குருதி வெளியேறி கண்களுக்கு ஆபத்தை ஏற்படுத்தக்கூடிய காயங்கள்
- எலும்பு முறிவு
- மண்டை ஓட்டு வெடிப்பு - மூளையில் குருதி கசிவு, மயக்கமடைதல், வலிப்பு, மூச்சடைப்பு, ஆகியவற்றைக் காணலாம்.

இரத்தம் வெளிவரக்கூடிய கிழிவு காயங்கள் காணப்படும்போது அது, இரத்தம் சம்பந்தமான நோயல்ல என உறுதிப்படுத்துதல் வேண்டும். அநேகமாகப் பல காயங்களைக் காணலாம். அதேபோல பல்வேறுபட்டவை குணமடையக்கூடியதாகவும் இருக்கலாம். அநேகமான முறிவுகள் பலவந்தமான இழுபறியாலேயே ஏற்படுகின்றன.

போஷாக்கைக் கவனியாது விடுதலும் சிறுவர் துஷ்பிரயோகத்தின் ஒரு பகுதியாகும். (இன்னுமொரு இடத்திலே விபரிக்கப்பட்டுள்ளது)

### பாலியல் துஷ்பிரயோகம்

மற்றவரின் பராமரிப்பில் வாழ்கின்ற, முதிர்ச்சியடையாத ஒரு பிள்ளையை அவர்களுக்கு உண்மையாகவே புரிந்து கொள்ள முடியாத பாலியல் நடத்தையில் தமது விருப்பைத் தெரிவிக்க முடியாத சந்தர்ப்பத்தில், பயன்படுத்துவது, பாலியல் துஷ்பிரயோகம் என அழைக்கப்படுகிறது.

சிறுவயதில் பாலியல் துஷ்பிரயோகத்திற்கு ஆளாகுபவர்கள், அதன் பாதிப்புகளை வயது வந்தபின்னரும் வெளிக்காட்டலாம். அவ்வாறான பிள்ளைகள், வயது முதிர்ந்த பின்னர் நியூரோசிஸ், சைக்கோஸிஸ், போன்ற நோய்களுக்கு ஆளாகி, முறையற்ற பாலியற் செயற்பாடுகளில் ஈடுபடுவர். அதேபோல விலைமாதர் தொழில், ஒரினப் பாலியல் உறவிலும் ஈடுபடுவர். சுரண்டல்ப் போன்றவற்றிற்கு ஆளானோர்கள், தாம் சிறு வயதிலே அவ்வாறான நிலைக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளானதைப் பற்றிய விளக்கத்தை அளிப்பர் இவ்வாறான பாதிப்புகள் அவரை மட்டுமல்லாது, சமுதாயத்தையும் பாதிப்புறச் செய்யும்.

அநேகமாகப் பாலியல் துஷ்பிரயோகம் ஏற்படுவது, நெருங்கிய உறவினர்களாலேயே பராமரிப்பு முறையில், வளர்க்கும் பிள்ளைகளை அவரது உறவினராலேயே பாலியல் வல்லுறவிற்கு ஆளாக்கப்படுவர். பிள்ளைகளுடன் நன்றாகப் பழகியவர்களாலேயே இவ்வாறு நடைபெறுகிறது. வெளியாட்களால் நடைபெறுவது அரிது. இம்சைக்கு உள்ளாக்குதல், தொடைகளுக்கிடையே ஆண்உறுப்பை உரசுதல், வாய் அல்லது பெண் உறுப்புடன் தொடர்புபடுதல், போன்ற செயல்களை அநேகமாகக் காணக்கூடியதாகவுள்ளது. நிர்வாண நிழற்படம் எடுத்தல், விபசாரத்தொழிலில் ஈடுபடுத்துதல், பாலியல் உறவு காட்சிகளைக் கொண்ட படங்களைப் பார்க்கச் செய்தல், பலாத்காரஞ் செய்தல் போன்றன இதிலே அடங்கும்.

பெண்பிள்ளைகளைப்போன்றே ஆண் பிள்ளைகளும் பாலியல் துஷ்பிரயோகங்களுக்கு உள்ளாகிறார்கள். உறவினர் அயலவர், சகோதரர், ஆசிரியர், மதகுரு, போன்றோருள் ஒருவர் மூலமாகத் தான் பாலியல் வல்லுறவுக்கு ஆளாகப்பட்டனர் என ஆய்வுகளின் மூலம் அறியப்படுகிறது. சில சமயங்களில், பெண்கள் மூலமாகவும் பாலியல்வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டனர் எனவும் சில ஆண்பிள்ளைகள் கூறுகின்றனர். தொடையில் ஆண் உறுப்பை உரசுதல், குதம் அல்லது வாய் மூலமாக பாலியல் உறவிலீடுபடுதல் மர்மஸ்தானங்களைத்தடவுதல், நிர்வாணப் புகைப்படங்களை எடுத்தல், காண்பித்தல் போன்றனவும் இவ்வாறான துஷ்பிரயோகங்களுட் சிலவாம். பின்வரும் செயல்பாடுகளினால் சிறுவர்பாலியல் துஷ்பிரயோகம் அதிகரித்துள்ளதென்று, கூறமுடியும்.

- ✧ பிள்ளைகள் உறவினர்களால் துஷ்பிரயோகஞ் செய்வது சம்பந்தமான முறைப்பாடுகள் குறைவாகவுள்ளன.
- ✧ பெற்றோர் தாங்கள் குற்றஞ் செய்வதனால் அல்லது சமுதாயத்தில் அபகீர்த்தி ஏற்படும் என்ற அச்சத்தில் வெளிக்கூறாதிருத்தல்
- ✧ பிள்ளைகள் ஓரினச் சேர்க்கையில் ஈடுபடுவதைக் குற்றமாகக் கருதாதிருத்தல்
- ✧ 30 வயதிற்குமேற்பட்ட பெண் ஒருத்தி 12 வயது ஆண்பிள்ளையுடன், பாலியல் தொடர்புவைத்திருந்ததைச் சமுதாயம் குற்றமெனக் கருதாதிருத்தல்
- ✧ மிகக்குறைந்த வயதிலே பாலியல் வல்லுறவிற்குட்பட்ட ஒரு பிள்ளை அச்சம்பவத்தை ஞாபகத்தில் வைத்திருக்கமாட்டாது.

அநேகமாகப்பிள்ளைகள் வெளிநாட்டு உல்லாசப்பயணிகளால் மட்டும் பாலியல் வல்லுறவிற்குட்படுத்தப்படுகின்றனர் என்ற தப்பான அபிப்பிராயம் இருக்கின்றது. ஆனால் அதை விடஅதிகமாக உள்நாட்டவர்களாலேயே இவ்வாறான துஷ்பிரயோகங்கள் நடைபெறுகிறது என்பதை மறத்தலாகாது.

### போதையூட்டலும், நஞ்சூட்டலும்

இது அவ்வளவு பாரிய அளவில் இல்லை, மருந்து வகைகள், மது அல்லது மயக்கமுட்டக்கூடிய மருந்துகளை அளித்து மயங்க வைக்கலாம். பால் போத்தலின் மூலம் கிருமிநாசினியை ஊட்டுதல் அல்லது அசிட் பருக்குதல் போன்ற சம்பவங்களும் தெரியவந்துள்ளது.

பிள்ளைகளின் ஊழியத்தைப் பயன்படுத்துவதும், அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில் காணக்கூடிய முக்கிய துஷ்பிரயோகமாகும் உடல் இளைக்க வேலை செய்வது மாத்திரமன்றி, பாலியல் ரீதியாகவும்இவர்கள் பாதிப்படைகின்றனர் என்பதைக் காணக்கூடியதாகவுள்ளது. அதுமாத்திரமல்ல உளரீதியாகவும் மற்றும் போஷாக்கு ரீதியாகவும் இவர்கள் பாதிப்புக்களுக்கு ஆளாகின்றனர். நாய்ச்சங்கிலியால் கட்டி வைத்தல், கூண்டுகளில் அடைத்தல் போன்ற சம்பவங்களும் நடைபெற்றுள்ளன.

### யுத்தப் படைகளில் பிள்ளைகளைச் சேர்த்தல்

இது தாய்நாட்டிற்காக உயிரைத்தியாகஞ் செய்வதா, அல்லது சிறுவர் துஷ்பிரயோக நிலையாக கணிக்க முடியுமா? துப்பாக்கிப் பாரத்தைத் தாங்கமுடியாத வயதிலுள்ள ஆயிரக்கணக்கான பிள்ளைகளுக்குப் போர்ப் பயிற்சியளித்து, ஆயுதமேந்திப் போரிடுவதாக உலகின் பல பாகங்களிலிருந்தும் தெரியவருகிறது. யுத்த களத்தில் ஏற்படும் உளரீதியான தாக்கங்கள், பிற்காலத்தில் பாரிய பாதிப்புகளை தரும் என நிரூபிக்கப்பட்டுள்ளது.

போரிலே கவனத்தைச் செலுத்தும் மாணவர்களின் கல்வியிலே தடை ஏற்படும் அதேபோல், அவர்கள் செய்யும் கடமை காரணமாக அநேகமாக மரணம் அல்லது பாரிய காயங்களுக்கு உள்ளாகின்றனர்.

யுத்தகளத்திற்குச் செல்லும்பிள்ளைகள் இன்னும்பல உளரீதியான பாதிப்புகளுக்கும் உள்ளாகின்றனர். தமது குடும்பத்தை விட்டுச் செல்லல், கொலைச் செயல்களில் ஈடுபடல், ஏனைய மனித இனத்தைப்பற்றி வைராக்கியத்தை ஏற்படுத்திக் கொண்ட நிலையை இங்கே காணக் கூடியதாகவுள்ளது. மனதிற்கு ஒவ்வாத ஏதேனுமொன்றை மனதிற் பதிப்பது அவனைத் தற்கொலை நிலைக்குக் கொண்டுவருவது, அல்லது பாரிய அளவிலான உளப்பாதிப்பை ஏற்படுத்துவது மாத்திரமன்றி, தெரிந்தே செய்த, மறைமுகமான நஞ்சருந்தலாகவும் கொள்ளமுடியும்.

### எவ்வாறு சிறுவர் துஷ்பிரயோகத்தைத் தடுக்கலாம்.

சிறுவர் துஷ்பிரயோகம் பற்றிய பிரச்சினையை முக்கிய சமூகப் பிரச்சினையாகப் புரிய வைத்தல்


இதில் தொடர்பு சாதனங்களுக்கே பாரிய பொறுப்பு உள்ளது. பத்திரிகைகளை விற்பனை செய்வது மாத்திரமே முக்கிய காரணமாகக் கொள்ளாது. சிறுவர் துஷ்பிரயோகச் சம்பவங்களை கவர்ச்சியான விதங்களிலே வெளியிடுவதைத் தவிர்த்தல் வேண்டும். அதேபோல அதன் முக்கியத்துவம், அதனுடன் இணைந்துள்ள பிரச்சினைகள் தாக்கங்களை கலந்தாலோசிப்பதற்கு அல்லது சம்பாஷனை மூலம் விளக்கமளிப்பதற்குத் தொடர்பு சாதனங்கள் முக்கியத்துவம் அளித்தல் வேண்டும். அதே போன்று பொது மக்களுக்கும், விசேடமாகப் பிள்ளைகள், ஆசிரியர்களுக்கும், அவ்வாறான சம்பவங்களை உரியவர்களுக்கு அறிவித்தல் செய்வதற்கு ஊக்கமளித்தல் வேண்டும் அதே போல எவ்வித பெரிய இடத்திலிருந்து வந்தபோதிலும்பெற்றார், முதியோர், உறவினர், ஆசிரியர், மதகுரு, அயலவர், போன்றோர்கள் அவ்வாறான விடயங்களை வெளிக் கூறுமளவிலான தைரியத்தை, பிள்ளைகளுக்கு ஊட்டவேண்டும். எமது கலாச்சாரத்தில் ஆசிரியர் உட்பட முதியோர்வரை மதிப்பளிக்கும் தன்மையைப் பிள்ளைகளிடம் ஏற்படுத்தல் வேண்டும். அதேபோல அவர்களுக்குக் கீழ்ப்படியும் தன்மையையும் ஊட்டுதல் வேண்டும். இவ்வாறான ஒருவர் ஏதேனும் பாலியல் வல்லுறவுக்கு பிள்ளையை அழைக்கும் போது அவர்கள் பிரச்சனைக்கு ஆளாவது இதனாலேயே எனவே மூத்தோருக்கு கீழ்ப்படியும்போது அது எந்த அளவுக்கு, இருத்தல் வேண்டும், பிள்ளையின் உரிமை யாது என்பவற்றையும் தெளிவுபடுத்தல் வேண்டும்.

சுகாதார ஊழியர்களுக்கும் வைத்தியர்களுக்கும் இதிலே முக்கிய பங்குண்டு பல்வேறு துஷ்பிரயோக நிலைகளை இனங்காணக்கூடிய திறமை அவர்களிடமிருத்தல் வேண்டும். அதேபோல, அவ்வாறான சந்தர்ப்பங்களில் எடுக்க வேண்டிய சரியான நடவடிக்கைகள் பற்றியும் அவர்கள்

6 →

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர் துஷ்பிர யோகங்களுட் சிலவும் அவற்றின் பலன்களும்



கொழும்பு பல்கலைக் கழக நீதித்துறை விரிவுரையாளர்
சாரிகா மாறசிங்ஹ

### போஷாக்கைக் கவனியாது விட்டால் உடல் ரீதியான பாதிப்பு ஏற்படுவது எவ்வாறு?

பிள்ளைக்குத் தேவையான உணவை வழங்காமலும், கவனியாதும் விடுவது மூலமாக அவர்கள் பாதிப்புக்குள்ளாகுவார்கள்.

- பிள்ளையின் வயதிற்கேற்ற உடல் வளர்ச்சி இல்லாவிட்டால் அல்லது
- பிள்ளையின் பெற்றோர்களின் பொருளாதார சமூகப் பின்னணியுடன் ஒப்பிடும் போது பிள்ளையின் போஷாக்கு மட்டும் உடல் வளர்ச்சியும் மிக பாதிப்புற்ற நிலையிலிருப்பின் இவ்வாறான நிலை இருக்கும் என சந்தேகிக்க முடியும்

இச்சந்தர்ப்பங்களை விட எதுவித வைத்திய ஆலோசனையுமின்றி குறிப்பாக பெண்பிள்ளைகளுக்கும் சில உணவுகளை வழங்குவதைத் தவிர்க்கும் சம்பிரதாயங்களும் சில குடும்பங்களிலே காணப்படுகிறது. சில சமயங்களில் வீட்டில் அனைவரும் உண்டபின்னர், மிகுதியான, அடிப்பிடித்த உணவுகளை வழங்கும் சந்தர்ப்பங்களும் உண்டு. இதுவும் போஷாக்கை கவனியாமல் விடுவதால் ஏற்படும் உடல் ரீதியான துஷ்பிரயோகமாகும்.

### போஷாக்கைக் கவனியாது விடுவதனால் பிள்ளையின் உடலில் ஏற்படக்கூடிய அறிகுறிகள்

- உடல் மெலிதல்
- கண் குழிவிழுதல்
- துர்நாற்றம் வீசுதல்
- கன்னங்களில் கொழுப்புக் குறைவினால் குழிவிழல்
- நாடை வேறாக வெளித் தெரிதல்
- உடலுக்குப் பொருத்தமற்றதாக தலை பெருத்தல்
- எலும்புக் கூடு போன்று காட்சியளித்தல்

### பொய்யான நோய் வரலாறு கூறுவதன் மூலம் சிறுவர் துஷ்பிரயோகத்தை சந்தேகிக்க முடியுமா?

அநேகமான பெற்றோர்களினால் இம்சைப்படும் பிள்ளைகளுக்கு ஏற்படும் காயங்களை, வேறேதும் நோயின் அறிகுறியென வைத்தியருக்கு எடுத்துக் கூறுவர். குறைந்த வயதுடைய பிள்ளைகள் தொடர்பாக கூறப்படும் இவ்வாறான தவறான கூற்றுகளினால் வைத்தியர்களும் தவறாகப்புரிந்து கொள்ளலாம். இப்படியான சந்தர்ப்பங்களில் அப்பிள்ளைகளை வைத்தியசாலையில் அனுமதித்து, பல்வேறு சிகிச்சைகளையும் அளிப்பர். இவ்வாறான பொய்களைக் கூறும் அநேகமான பெற்றோர், சுகாதார சேவைகளிலுள்ளவர்களே. உடலில் பலவேறு இடங்களில் உண்டாகும் இரத்தக் காயங்களை நோயறிகுறிகளைக் காண்பிப்பதுடன், சிலவேளை, தமது இரத்தத்தை அவ்விடங்களிலே இட்டுக் கொள்வார்கள். சிலவேளை நோயறிகுறிகளுக்குச் சமனான அறிகுறிகள் அப்பெற்றோர்களிடமும் காணக்கூடியதாயிருக்கும்.

### உளரீதியான துஷ்பிரயோகம் என்பது யாது?

உடல்ரீதியாக மாத்திரமன்றி, உளரீதியாகவும் பிள்ளைகள் துஷ்பிரயோகங்களுக்கு ஆளாகின்றனர். உளரீதியாகப் பாதிப்புறும் சந்தர்ப்பங்களிற் சில கீழே தரப்பட்டுள்ளன.

- குழந்தையை நிராகரித்தல்
- குழந்தையைத் தனிமைப்படுத்தல் (இருட்டறையில் இடுதல்)
- குழந்தையை விமர்சித்தல்
- குழந்தையைப் பயமுறுத்தல்
- குழந்தைக்கு ஏசுதல்
- குழந்தைகளின் கைகால்களை முறிப்பதாக அச்சுறுத்துதல்
- குழந்தையின் அன்றாட கடமைகளில் பெற்றோர் உதவியளியாதோராயிருத்தல்

### பிள்ளைகளைச் சேவையிலீடுபடுத்துவதனால் சிறுவர் துஷ்பிரயோகமாவது எப்படி?

பிள்ளைகளைச் சட்டவிரோதச் செயல்களில் ஈடுபடுத்துவதும், இன்னுமொரு வகையான சிறுவர் துஷ்பிரயோகமாகும். விசேடமாக, வீடுகளில் வேலைக்கமர்த்தப்படும் பிள்ளைகள் உடல் ரீதியாகவும் பாலியல் ரீதியாகவும் பாதிப்புற்ற சம்பவங்களை அடிக்கடி கேட்கக் கூடியதாகவுள்ளது. இதன் மூலம் பிள்ளைகளின் பாதுகாவலர் இரண்டு குற்றங்களைச் செய்கின்றனர். பிள்ளைகளை வேலைக்கமர்த்துவதும் ஒரு குற்றமாகும் அவர்களை உடல் உளமற்றும் பாலியல் ரீதியாகத் துஷ்பிரயோகஞ் செய்வதும் மற்றுமொரு குற்றமாகும்.

இப்பிள்ளைகள் மிகவும் வறிய குடும்பங்களிலே உள்ளவர்களும் அன்றாட உணவுக்கே வழியற்-

றவர்களுமாவர். இவர்களை

6 →

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிறுவர் துஷ்பிர யோக நிலைமைகள்...

← 5

வேலைக்கமர்த்துபவர்கள் கூறுகின்றனர். ஆனால் எவ்வளவு வறிய குடும்பமாக இருப்பினும் அவர்களை வேலைக்கமர்த்துவது குற்றமாகும்.

### பிள்ளைகளை விற்பது சிறுவர் துஷ்பிரயோகமாவது எப்படி?

- பிள்ளைகளை வளர்ப்பதற்காக வெளிநாட்டவரிடம் கொடுத்தல்.
- பிள்ளைகளின் உறுப்புகளைக் எடுப்பதற்காக
- மத்தியகிழக்கு நாடுகளில் ஒட்டக ஒட்டப்போட்டிகளில் ஈடுபடுத்துதல்

போன்ற பல்வேறுபட்ட சட்ட விரோத செயல்களுக்காக இவர்களை விற்பனை செய்கின்றனர். சில வேலை தாயின் கருப்பையிலிருக்கும்போதே இவ்வாறான ஒப்பந்தம் செய்யப்பட்டிருக்கலாம். அநேகமாகப்பெற்றோரின் அனுசரனையுடன் பணத்திற்காக இது செய்யப்படலாம். பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்ட திருமணமாகாத பெற்றோர்கள் இவ்வியாபாரத்திலே ஈடுபடுகின்றனர்.

தமது வாழ்வைப்பற்றித் தீர்மானம் எடுக்க முடியாத வயதிலுள்ள பிள்ளைகள் இதற்கு ஆளாகுவர் என்பதில் சந்தேகமில்லை.

குழந்தை இல்லாதவர்களுக்கும் பிள்ளைகளை வளர்ப்பதற்காக விற்கப்படுகின்றன. மேலும் விபச்சாரத் தொழிலில் ஈடுபடுத்துவதற்கும். வீடுகள் உட்பட பல தொழில்களில் ஈடுபடுத்துவதற்கும் பிள்ளைகளை விற்பனை செய்வர்.

### துஷ்பிரயோகங்களுக்கு ஆளாகும் பிள்ளைகளின் உளரீதியான மாற்றங்கள்

- மிகவும் பயத்துடன் நேரத்தைக் கழிப்பர்
- அச்சம் காரணமாக உடலில் பல்வேறு நோயறிகுறிகள் உண்டாகும்.
- குடும்ப அங்கத்தவரிடமிருந்தும், பழக்கப்பட்ட வரிடமிருந்தும் ஒதுங்கி வாழ்வர்.
- அன்றாட கடமைகளைத் தவிர்த்துக் கொள்வதுடன் பாடசாலை செல்வதையும் விரும்பமாட்டார்கள்.
- எதிர்காலத்தைப் பற்றிய நம்பிக்கையை இழந்து விடுவர்.
- பிள்ளைகளின் கல்வி வேகமாக வீழ்ச்சியடையும் கட்டுப்படுத்த முடியாதவாறு குழப்படி செய்வர்
- விரைவாகக் கோப்படுவார்.
- எல்லோரையும் வெறுப்பர்.

## சிறுவர் துஷ்பிரயோகம் ...

← 4

தெரிந்திருத்தல்வேண்டும்.

துஷ்பிரயோகங்களுக்கு ஆளான பிள்ளைகள் பற்றி, உரியவர்களுக்கு அறிவிப்பதற்காக திடமான வேலைத்திட்டம் இருத்தல்

இதற்குஏற்றதான நடைமுறைவிதிகள் இருக்க வேண்டும். கிராம உத்தியோகத்தர், குடும்ப நல சேவையாளர், போன்றோர், இதனைப்பற்றித் தெரிந்திருக்கலாம். ஆனால் இதற்கும் பின்னர் என்ன செய்யவேண்டும் என்பது பற்றித் தெரியாமலிருக்கலாம். எனவேஇதற்கான வேலைத்திட்ட மொன்றிருத்தல்அவசியம். துஷ்பிரயோகங்களுக்காளான பிள்ளைகள், தொடர்பாக முறைப்பாடு செய்வதற்கான உத்தியோகத்தர் கிராமத்திலேயே இருத்தல் அவசியம். அவர்கள் நம்பிக்கையானவர்களாகவும் இருத்தல் முக்கியம். சம்பவத்தை மேலிடத்திற்குக் கொண்டு செல்வதால், ஏதேனும் பயனிருப்பின் மாத்திரமே அவ்வாறு செய்யவேண்டும்அவ்வாறு பயன் இல்லாவிட்டால், மேலும் பிள்ளை அவமானத்திற்கு ஆளாகி பாதிப்புகளும் அதிகரிக்கலாம்.

அண்மையில் 14 வயதுடைய மாணவி ஒருத்தி அயலவர் ஒருவர் மூலம் பாலியல் வல்லுறவிற்கு உட்படுத்தப்பட்டு, ஒரு குழந்தையை பெற்றெடுத்தார். தாங்கள் ஏழைகள் பொலிஸ், கோடு என்று செல்வதற்குத் தங்களுக்கு வசதியில்லை என்றும் இதனைப்பற்றிய விசாரணையில் கூறினார். இதிலே முற்றிலுமாக உண்மையில்லா விட்டாலும், மக்களின் நம்பிக்கையற்ற தன்மை இதிலிருந்து வெளிப்படுகிறது. இவ்வாறானோர்களுக்கு முறையான சட்டம் அத்தியாவசியமாகும் முன்பு கூறப்பட்ட பிள்ளையின் பெற்றோர், அவளை வீட்டு வேலையாளாக அனுப்பினர். இதனாலே அவள் பல்வேறு பாதிப்புகளுக்கும் ஆளானாள்.

இன்னுமொரு முக்கிய காரணம், வன்செயலுக்கு ஆளான பிள்ளையை, குற்றவாளி அல்ல. குற்றத்திற்கு ஆளாக்கப்பட்டவர் என்றே சமுதாயம் கூறும் அவர்களை ஒதுக்கிவைப்பதால் பாரிய விளைவுகள் ஏற்படும். அவமானம் ஏற்படலாம் என்பதால் பெற்றோரும், முறைப்பாடு செய்வதில்லை. கல்வியூடாக இந்நிலையை மாற்ற முடியுமாயின், பிள்ளைகளின் பெற்றோரும் முறைப்பாடு செய்ய முன்வருவர். அப்போதுதான் உண்மையான நிலைமை வெளிவரும்.

இவ்வாறான பிள்ளைகள் பாடசாலைக் கல்வியையும் கைவிடுவர். ஒழுக்கமற்ற பிள்ளைகளாகக்கணிக்கப்படுவர் ஆனால் அவர்கள் உண்மையிலேயே பாதிப்படைந்தோராவார்.

இவற்றின் விளைவாக பிள்ளைகள் சமுதாயத்தையே வெறுப்பர். இதனால் பாரிய விளைவுகள் சமுதாயத்திலே ஏற்படக்கூடும்.

## பிஞ்சு மொட்டுக்களை ...

← 2

பாவனைக்காக அல்ல என்பதைப் புரியவைத்தல் வேண்டும். எவ்வளவு நெருக்கமாகப் பழகும் ஒருவராயினும், சந்தேகத்திற்கிடமான முறையில் ஸ்பரிசிப்பதைப் புரியவைக்க வேண்டும்.

பிள்ளையின் வயதிற்கேற்றவாறு பாலியல் பாதிப்புகளைப் பற்றி அவர்களுக்கு விளங்கவைக்க வேண்டும். அனாவசியமாக கீறல்கள், வெட்டுக்காயங்கள், கிள்ளிய காயங்கள், இரத்தக்கறைகள் இருக்குமாயின், அதனைப்பற்றி உடன் விசாரித்தல் வேண்டும். அண்மையிலிருந்து யாரேனும் ஒருவரின் மீது அதிக பயததைக் காட்டுவாராயின், அல்லது அவரை ஒதுக்குவாராயின் அவரைப் பற்றி விசேட கவனத்தைச் செலுத்துதல் வேண்டும். பிள்ளை வாசிக்கும் புத்தகங்கள், படங்கள் போன்றவற்றில் கவனத்தைச் செலுத்தல் வேண்டும்.

பயமுறுத்தலோ, அச்சுறுத்தலோயின்றி நடந்த சம்பவங்கள் யாவற்றையும் சொல்லக் கூடியவாறு பிள்ளையின் மீது நம்பிக்கையை உண்டுபண்ண வேண்டும். விசேடமாகப் பழகும் வளர்ந்தோரினால் வழங்கப்பட்ட பரிசில்கள் இருப்பின் அதனை ஒழிவுமறைவின்றி சொல்லக்கூடிய சூழலை உண்டு பண்ணவேண்டும்.

மேற்கூறிய விடயங்களினால் பாலியல் துன்புறுத்தல்களை முற்றாக ஒழித்து விட முடியாது. ஆனால் அவற்றைக் குறைத்துக் கொள்வதற்கு உதவியாக இருக்கும்.

பிள்ளைகளை நெருங்கும் வளர்ந்தோர் அவ்வாறு நடந்து கொள்வது உண்மையான அன்பின் காரணத்தினாலா அல்லது காமத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்வதற்காகவா என்பதை உங்களால் மோப்பம் பிடிக்க முடியும். எப்படியிருப்பினும் பிள்ளைமேல் எப்போதும் விழிப்புணர்வுடன் இருங்கள். நீங்கள் கண்மூடித்தனமாக இருந்து, பிள்ளை பாதிப்படைந்தால் உங்களின் சகல சொத்துக்களினதும் பயன் யாது?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் துஷ்பிரயோகநிலையை இனங்காண்போம்

சட்டநிபுண வைத்தியர்
**ஹேமமால் ஜயவர்தன**

**ஆசிய நாடுகளில் ஏற்படும் சிறுவர் துஷ்பிரயோகம் குறைந்த மட்டத்திலே இருப்பதாக சிலர் சிந்திக்கிறார்கள். அது எமது பிள்ளைகளுக்குத் தேவையான பாதுகாப்பு, எமது பாட்டன் பாட்டி போன்றோர்களால் பாதுகாப்பு கிடைக்கும் என்ற அடிப்படையிலேயே பரவியுள்ளது. ஆனால் அபிவிருத்தியுடன் இலங்கையிலும் சிறுவர் துஷ்பிரயோக சம்பவங்கள் அதிகரித்துள்ளது. சமூகப் பிரச்சினையாகவுள்ள இதனை ஒழித்துக் கட்டுவதற்குப் பொதுமக்களுக்கு அறிவூட்டுவது முக்கியம். வைத்தியர்கள், தாதிமார் பொது சுகாதாரப்பரிசோதகர், குடும்பநல சேவையாளர், போன்ற சுகாதாரத் துறையுடன் தொடர்புடையோருக்கு இந்த ஒழிப்பு நடவடிக்கையில் முக்கிய பங்குண்டு.**

சிறுவர்கள் முகங்கொடுக்கும் சகலவித உடல், உள ரீதியான துஷ்பிரயோகங்களும் சிறுவர் துஷ்பிரயோகம் எனப்படும். சிறுவர் உழைப்பைப் பயன்படுத்தல் (அவர்களை வேலைக்கமர்த்தல்), பிள்ளைகளைக் கவனியாது விடல், பாலியல் துஷ்பிரயோகம், பெற்றோர் அல்லது பாதுகாவலரினால் செய்யப்படுகின்ற காயங்களும் சிறுவர் துஷ்பிரயோகமாகக் கருதப்படும்.

சிறுவர் துஷ்பிரயோகத்திற்கு உள்ளான சிறுவர்களைப் பற்றி காவல்துறையினருக்கு அறிவித்தல் கொடுப்பது சமுதாயத்திலுள்ள யாபேரினதும் கடமையாகும். சுகாதார ஊழியர்களுக்கு இதிலே பாரிய பங்குண்டு. காயமுற்றோரை பரிசோதிக்கும் வைத்தியருக்கு எப்போதாவது ஒரு முறை இவ்வாறான துன்பங்களுக்கு உள்ளான பிள்ளைகளை சந்திக்க நேரிடலாம் தான் பரிசீலித்த பிள்ளையின் காயங்களுக்கேற்ப அவர் துஷ்பிரயோகத்திற்கு உள்ளானவரா எனத் தீர்மானிப்பதற்கான அறிவு வைத்தியர்களுக்கு இருத்தல் வேண்டும். இம்சைப்படுத்திய பிள்ளைகளைக் கொண்டு வருவோர் உண்மையான காரணங்களைக் கூறுவதில்லை எனவே, இது தொடர்பான அறிவு வைத்தியருக்கு இருக்க வேண்டும்.

### தெளிவான வரலாறைத் தெரிந்திருப்பது அவசியம்!

காயமுண்டானது எவ்வாறு, என்பதைப் போலவே சமூக சூழலைப் பற்றியும் நோயின் வரலாறு பற்றியும் பெற்றோரிடமிருந்து வைத்தியர் தெரிந்து கொள்ளல் வேண்டும். பெற்றோரினால் இவ்வாறான காயங்கள் ஏற்பட்டிருப்பின். அது தொடர்பான தெளிவான விளக்கத்தை அவர்கள் அளிக்கமாட்டார்கள். இயற்கையாக உண்டான நோயல்ல என தீர்மானிப்பதற்காக ஏனைய அறிகுறிகளையும் அவர்; ஆராய வேண்டும் அதன் பின் நடைபெற்ற சம்பவங்களைப்பற்றி பிள்ளையிடமும் வினவவேண்டும்.

இதனை மிகக் கவனமாகச் செய்தல் வேண்டும். பெற்றோருக்கு தெரியாது பிள்ளையிடமிருந்து இரகசியமாகத் தகவல்களைப் பெறவேண்டும். காயமுற்ற நீண்ட நேரத்திற்குப் பின்னர் பிள்ளையை வைத்தியசாலையில் அனுமதித்திருக் கலாம். அதற்குக் காரணம் பெரும்பாலும் இவ்வாறான காயமேற்பட்டவுடன் அநேகமாகத் தாமதித்தே வைத்தியசாலைக்குக் கொண்டு செல்வர் அதேபோல இவர் குடும்பத்தில் கடைசிப்பிள்ளையாக இருக்கலாம் அல்லது விரும்பத்தகாத பிள்ளையாகவும் இருக்கலாம். அநேகமாகப் பெற்றோர் நம்ப முடியாத விடயங்களை அநேகமாகக் கூறுவர். பெரும்பாலானோர், பிள்ளை கீழே விழுத்த தென்றே கூறுவர். அவ்வாறு கீழே விழுந்திருப்பின், முழங்கை, முழங்கால் போன்ற இடங்களில் உராய்வுகள் காணப்படலாம்.

அநேகமாகத் துஷ்பிரயோகங்களுக் காளான பிள்ளைகளில் கைகளின் முடிவுப்பகுதிகளிலே காயங்களைக் காணக் கூடியதாக இருக்கும் காரணம் அப்பகுதியிலே இறுக்கமாக முறுக்கிப் பிடிப்பதே கன்னங்களில் காயங்கள், பற்களினால் ஏற்பட்ட காயங்களும், அப்பிள்ளைகளுக்குக் கன்னங்களில் அடித்ததனால் ஏற்பட்டதாக விருக்கும்.

கடுமையாகக் காயப்பட்டிருந்தால். கண்விழிகள் பிதுங்கி, கண்களில் குருதிக் கசிவையும் காணக்கூடியதாகவிருக்கும் கண்ணின் கீழ்ப்பகுதியில் காணப்படும் காயங்களை விழுந்ததனால் ஏற்பட்டது என்றபோதிலும் அதனை நம்ப முடியாது. விறகு, அல்லது தடிகளால் அடிப்பதனாலும் இவ்வாறு ஏற்படலாம், விலாப்பகுதி அல்லது, மண்டையிலும் வெடிப்பு ஏற்படலாம். சுமார் 1 செ.மீ. அளவுள்ள எரிகாயங்களிருப்பின் அது சிகரட் மூலமாகச் சுடப்பட்டது எனச் சந்தேகிக்கலாம். நகங்களினால் ஏற்படுத்திய காயங்கள் பிறைவடிவமாக இருக்கும். X கதிர் மூலமாக, குணமடைந்த காயங்களையும் பழைய வெடிப்புக் காயங்களையும் கண்டு கொள்ளலாம்.

### துன்புறத்தலுக்காளானதைக் காட்டக்கூடிய அறிகுறிகள்:-

துன்புறுத்தலுக்கு ஆளாக்கப்பட்டு, தனது முன்னிலையில் கொண-டுவருவோரில் வைத்தியர் அவதானிக்கக் கூடியது, தெளிவற்ற காயங்களின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடையாளங்களையே பிள்ளைகள் நீண்டகால-மான இம்சைகளை அவ்வடையாளங்கள் மூலமாகக் காணலாம்.

நோய்க்கான பரிசோதனை அறிக்கையைப் பெரிதுபடுத்தி பெற்றோரைத் தேவையற்ற சஞ்சலத்திற்கு ஆளாக்காமல் இருப்பதற்கு வைத்தியர்கள் நடவடிக்கை எடுத்தல்வேண்டும். உதாரணமாக அபாயகரமற்ற காயங்களாக வெளிக்காட்டக்கூடிய இயற்கையான நோய்நிலைகளும் உண்டு. சில இளையங்கள் சம்பந்தமான நோய்நிலைகள் திடீர்விபத்துகளில் தோன்றக்கூடிய முறிவுகள் போலக் காணப்படலாம். ஸ்கேவி, றிகட்ஸ், போன்ற விட்டமின் குறைவால் ஏற்படுகின்ற நோயின் போதும் எலும்பு முறிவுகள் ஏற்படலாம். இவ்வாறு துன்புறுத்தல்களுக்கு ஆளான பிள்ளைகளின் பெற்றோர்கள் மந்தமான பொருளாதாரநிலையில் உள்ளவர்க-ளாகவும், மிகவும் குடிவகைகளைப் பாவிப்போர்களாகவும் இருப்பர் இவ்வாறே அதிக பிள்ளைகளை உடையவர்களாகவும் இருப்பர். இவர்களது பிள்ளைப் பராயத்திலும் அதிர்ஷ்டமற்றவர்களாகவே இருந்திருக்க கூடும்.

பிள்ளைகளை உடல்ரீதியாக மட்டுமல்லாது உளரீதியாகவும் துன்புறுத்த முடியும். சமுதாயத்துடன் எதுவிதத் தொடர்பும் கொள்ளவிடாது, ஏனையோர்களுடன் உறவு கொள்ள அனுமதிக்காது, போதிய போஷணை, போதிய நித்திரை கொள்ள விடாது, ஓர் இருட்டறையில் பூட்டி வைப்பதும் இவ்வுள ரீதியான துன்புறுத்தல்களிலே அடங்குகின்றன.

சிலவேளைகளில் பலாத்காரமாகவும் இம்முறைகளைப் பயன்படுத்துவர் பிள்ளைகளின் ஆளுமை விருத்திக்குத் தடையை ஏற்படுத்தக் கூடியவாறு, கடும் சட்ட திட்டங்களை அமுல்ப்படுத்தி, அதற்கு அடிபணியாத சந்தர்ப்பங்களில் அதற்கான காரணங்களுக்குக்கூட செவிமடுக்காது கடுமையான தண்டனைகளும் வழங்கப்பட்டது. பாலியல் வல்லுறவு பற்றி நேரடியாக விமர்ச்சிப்பதும், முழுநிர்வாணப் படங்களை எடுப்பதும், பாலியல் வல்லுறவில் ஈடுபடுத்துவது போன்ற காரியங்களும் செய்யப்படுகின்றன.

### வீட்டு வேலையாட்கள்

வீடுகளில் வேலைக்கமர்த்தப்படும் பிள்ளைகளிலும் இதே மாதிரியான காயங்களைக் காணக் கூடியதாகவிருக்கும். இவ்வாறு நடந்து கொள்வது, வீட்டுத்தலைவி, அல்லது பிள்ளைகளேதான். 14 வயதிற்குட்பட்-டோரை வீட்டு வேலைக்கு அமர்த்துவது தடைசெய்யப்பட்டிருந்த போதிலும் நீண்டகாலமாக அத்தடை உத்தரவு அமுல்ப்படுத்தப்படவில்லை.

இவ்வாறு பாதிப்புற்றோர் வைத்தியரிடம் வரும்பட்சத்தில், அவர்களை வைத்தியசாலையில் அனுமதிக்கப்படவேண்டுமாயின் அனுமதித்து அவர்களுக்கான சிகிச்சைகளை அளித்து, இனியும் அவர்கள் இவ்வாறு பாதிப்புக்குள்ளாகா தவாறு உதவுமுகமாக உரிய அதிகாரிகளுக்கு இது தொடர்பாக அறிவித்தல் செய்ய வேண்டும். துன்புறுத்தலுக்காளான பிள்ளைகள் இன்னுமிருப்பின் அவர்களையும் பரிசீலனை செய்தல் வேண்டும். துன்புறுத்தியோரை ஒரு மனநோய் வைத்தியரிடம் காட்டுதல் வேண்டும்.

### உதாரணமாக நான் நேரில்கண்ட ஒரு சம்பவத்தைக் கூறுகின்றேன்

அந்தப் பெண் பிள்ளைக்கு வயது 8 இருக்கும். உடல் முழுவதிலுமாக சுமார் 200 காயங்கள் இருக்கும். அவளுக்குத் தனது வயதைக்கூட கூற முடியாது. அவள் பருவமடையவுமில்லை. வீட்டிலே வேலையாளாக இருந்த அப்பிள்ளை அவ்வீட்டு இரு பிள்ளைகளுள் ஒன்றினைப் பராமரித்து வந்தாள். இது தவிர மூன்று வருடங்களாக உணவு சமைத்தல், உடுப்பு துவைத்தல் வீட்டை சுத்தஞ் செய்தல், கிணற்றிலிருந்து நீர் இறைப்பது போன்ற வேலைகளிலும் ஈடுபட்டாள்.

தனது எஜமானியும் அடிக்கடி தன்னை அடிப்பதாகவும் கூறினாள். எஜமான் தன்னை ஒரு முறை அடித்ததாகவும், பிள்ளைகள் அடிக்கவில்லை என்றும் கூறினாள். அப்பிள்ளை எதைச் செய்த போதிலும், வீட்டார் அதிலே குற்றங்கண்டனர் கையினால் மாத்திரமல்ல, தடி, விறகு போன்றவற்றினாலும் தன்னை அடித்ததாக அவள் கூறினாள்.

சில சந்தர்ப்பங்களில், தனது தோற்பட்டை, தலைமயிர் போன்றவற்றைப் பிடித்து உலுக்கியதாகவும் கூறினாள். ஆணியுடனான தடியைக் கொண்டும் தன்னை அடித்துத் தாக்கியதாகவும் கூறினாள். கரண்டியைச் சூடாக்கி அவளது உடலிலே சூட்டுக் காயங்களை ஏற்படுத்தியதாகவும் கூறினாள். பல சந்தர்ப்பங்களில் தனது எஜமானி தன்னைத் தரையில் கிடத்தி ஏறி மிதித்ததாகவும் கூறினாள் அவளுக்குரிய வேதனத்தை வங்கியில் வைப்புச் செய்வதாக கூறினர் ஆனால் அவ்வாறு செய்யவில்லை என்றும் கூறினாள் எப்படியாயினும் தன்னைப் பாலியல் ரீதியில் துன்புறுத்த வில்லை என்றும் கூறினாள்.

அவள் எம்முடன் உரையாடும்போது எதுவித சலனமுமின்றிக் காணப்பட்டாள். சிரிக்கவோ, அழவோவில்லை.

மேலும் அவ்வீட்டின் துன்பங்களைத் தாங்கமுடியாது, அவ்வீட்டை விட்டே வெளியேறித் தப்பி வந்தாள். அயல்வீட்டிலிருந்த ஒரு பெண் அவளைப் பொலிசாரிடம் ஒப்படைத்தாள்.

அவளது கழுத்து, நெஞ்சின் மேற்பகுதி, கை போன்ற உறுப்புகளில் 179 உலர்ந்த கீறற்காயங்களைக் காணக்கூடியதாக இருந்தது. இது துன்புறுத்தியோரால் ஏற்பட்ட கீறல்களாக இருக்கலாம். நகங்களால் ஏற்படுத்தப்பட்ட காயங்கள் பிறை வடிவமாகக் காணப்பட்டது. இது தொடர்ச்சியாக ஏற்படுத்தப்பட்ட காயங்களின் வடுக்களே என தீர்மானிக்கக் கூடியதாக இருந்தது.

அவளது முதுகுப்புறத்தில் ஆறாத புண் ஒன்றும் காணப்பட்டது. அதற்கு அருகில் காணப்பட்ட கறுப்பு நிற அடையாளங்கள் நீண்டகாலமாக உள்ள அடையாளமாக இருக்கலாம். அவளது தொடைப் பகுதியிலும் காய்ந்த புண்களின் அடையாளங்கள் காணப்பட்டன. பிரம்பால் அடிபட்ட காயங்களின் அடையாளங்களும் இருந்தன. அவளது இடது கையில் வெளியே தெரியக்கூடியவாறு எலும்பும் தள்ளிக் கொண்டு இருந்தது. அடிக்கடி ஏற்பட்ட காயங்களினாலேற்பட்ட அசாதாரண நிலை என கதிர் பட அறிக்கைகள் மூலம் தெரிய வந்தன.

தொடையின் மேற்பகுதியிலோ, பாலுறுப்புகளிலோ எதுவித காயங்களும் இல்லாத படியால் அவள் பாலியல் வல்லுறவுக்கு ஆளாக்கப்படவில்லை எனத் தீர்மானிக்க முடிந்தது.

எமது சட்டங்களிலுள்ள குறைபாடுகள் காரணமாகவே இப்பிள்ளை இந்நிலைக்கு ஆளாகியிருக்கலாம். பாரிய காயங்கள் ஏற்படுத்துவது பற்றி கிரிமினல் சட்டத்தில் உளரீதியாக ஏற்பட்ட பாதிப்புகள்ாற்றி எதுவுமில்லை எனவே கடந்த காலங்களில் அவளுக்கு ஏற்பட்ட உளரீதியான பாதிப்புகளுக்கு கிரிமினல் சட்டமூலமாக தீர்வு பெறமுடியவில்லை.

உதாரணமாக சிறிய முறிவு அல்லது அடிப்பதன் மூலமாக பற்களை விழுத்துதல் பாரிய காயங்களை ஏற்படுத்தியதாகச் சட்டத்தின் முன் செல்லலாம். ஆனால் இடைக்கிடை ஏற்படுத்தப்பட்ட துன்புறுத்தல்களினால், கல்சியம் படிந்து, பாரிய அளவில், எலும்பு அசாதாரண நிலைக்கு வந்தாலும், இப்பிள்ளையைத் துன்புறுத்தியோரில், சிறுகாயங்களை ஏற்படுத்தியதாக மாத்திரமே வழக்குத் தொடர முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர் உரிமைகள் தொடர்பான விதிகளில் அடிப்படைக் குறிப்புகள்


சர்வதேச ஆரம்ப சிறுவர் கட்டாய உழைப்பு சட்டத்தின் (1919) முறையான உற்பத்திப் பிரிவில் தொழில் புரிகின்ற சிறுவர்களுக்காக அமைக்கப்பட்டபோதும், கடந்த பல ஆண்டுகளாக, உலகில் நிலை கொண்ட நிலைமை மேலும் பரிநாமம் அடையச் செய்வதற்கும், மென்மேலும் பரவலாக்கப்பட்டுள்ளது. தற்போது அது கைத்தொழில் அல்லாத வேலைகளில் ஈடுபடுகின்ற சிறுவர்கள் பற்றி சிந்திப்பதற்குப் போலவே, எந்தவித ஊதியம் செலுத்தும் அல்லது செலுத்தாத உழைப்புகளைத் தடைசெய்து பற்றியும், வேலைசெய்யும் பிள்ளைகளின் பாதுகாப்பு, மற்றும் அவர்களுக்காகச் செலுத்த வேண்டிய பாதுகாப்பு பற்றியும், பாதுகாப்பு திட்டங்கள் பற்றியும் கவனஞ் செலுத்தப்படுகிறது.

சிறுவர் உரிமைகள் தொடர்பான சாசனத்திற்கு அங்கீகாரம் வழங்கிய நாடுகளில் தற்போது நடைமுறையிலுள்ள சர்வதேச சட்ட திட்டங்கள், நற்பிரேரணைகளைக் கவனத்திற்கொண்டு பிள்ளைகளைத் தொழிலில் ஈடுபடுத்தக்கூடிய குறைந்த வயதெல்லையைத் தீர்மானிப்பது தொடர்பாக 32ம் பிரிவின்படி உறுதிப்படுத்தியுள்ளது. அது இங்கு கீழே காட்டப்பட்டுள்ளது.

குறைந்தவயது (கைத்தொழில்) சாசனம் இல. 5 சர்வதேச தொழிலாளர் அமைப்பின் ஆரம்பக் கூட்டத் தொடரின்போது தயாரிக்கப்பட்ட பின் 72 நாடுகளினால் அங்கீகரிக்கப்பட்ட இச்சாசனத்திற்கமைய ஏதேனும் கைத்தொழில் ஈடுபடுவதற்கான வாய்ப்புக் கிடைக்கும் குறைந்த வயதெல்லை 14 ஆகும். பிள்ளைகளை வேலைக்கு அமர்த்துவதைக் கட்டுப்படுத்துவதற்காக சர்வதேச ரீதியில் எடுக்கப்பட்ட முதல் முயற்சி இதுவேயாகும். அதன்பின் உலக தொழிலாளர் அமைப்பினால் வேலை துறைகளுக்கும் பொருந்துமாறு பல சட்டதிட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.

சர்வதேச தொழிலாளர் அமைப்பின் உழைப்புக் கட்டாயம் தொடர்பான சாசனம் இல. 29.

இச்சாசனத்தில் சகலவிதமான கட்டாய வழியத்தைப் பறிப்பதை இல்லாதொழிப்பதற்கான நடவடிக்கைகளை உள்ளடக்கும். தண்டனை ஒழுங்கு அச்சுறுத்தல் மூலம் கோரப்பட்ட, எந்தவொரு நபரும் தாமாகவே அவ்வேலைக்காக முன்வராத, ஏதேனும் தண்டனைக்கு உள்ளாக்கப்படும் சேவைகளுக்கும், வேலைகளுக்கும் அமர்த்துவதாகும். 1996 செப்டெம்பர் மாதமளவில், இச்சாசனத்தில் உள்ளடங்கிய நாடுகளின் எண்ணிக்கை 139 ஆகும்.



1966

சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் பற்றிய சர்வதேசக்குழு

ஐ.நா. பொது சபையினால் 1966ல் அங்கீகரித்து 1976 முதல் செயற்படத் தொடங்கிய அவ்வொப்பந்த மூடாக 1948ல் வெளியான மனித உரிமைகளை அனுபவிக்கும் சந்தர்ப்பத்தைப் பெற்றுக் கொடுப்பதற்கு ஆரம்ப அர்ப்பணம் செய்வது இதன் நோக்கமாகும். இந்த ஒப்பந்தத்தின் 8 நிபந்தனைகளுக்கமைய எவரேனும் ஒருவரை அடிமைத்தனப்படுத்தலாகாது. அதே போல நிர்ப்பந்தித்து ஊழியத்தைப் பெறலுமாகாது. 1996 செப்டெம்பர் நடுப்பகுதியிலே 135 நாடுகள் இவ்வொப்பந்தத்தை ஏற்றுக்கொண்டது.

1966

பொருளாதார-சமூக மற்றும் கலாச்சார உரிமைகள் பற்றிய சர்வதேச ஒப்பந்தம்.

ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச்சபையினால் 1966ல் அங்கீகரிக்கப்பட்டு, 1976ல் செயற்படத் தொடங்கிய இவ்வொப்பந்தம், பொருளாதார சமூக மற்றும் கலாச்சார உரிமைகள் பற்றிய மனித உரிமைகள் தொடர்பான சர்வதேச வெளியீட்டின் அடிப்படைக் கொள்கை சர்வதேச வெளியீட்டின் அடிப்படைக் கொள்கைகளை மீண்டும் உறுதிப்படுத்தியது. இந்த ஒப்பந்தத்தின் 10வது நிபந்தனைக்கமைய இளஞ் சமுதாயத்தின் பொருளாதார நிலையைச் சுரண்டுவதிலிருந்தும் மற்றும் அவர்களின் நல்லொழுக்கம், சுகாதாரம் அல்லது அவர்களது வாழ்க்கைக்கு ஆபத்தை ஏற்படுத்தக் கூடிய அல்லது அவர்களது பொதுவான முன்னேற்றத்திற்குப் பாதிப்பை உண்டு பண்ணக்கூடிய செயல்களைத் தவிர்ப்பதற்கு அரசுகள் பங்காளிகளாவார்கள். அவ்வாறே இவ்வொப்பந்த மூடாக, சிறுவர் ஊழியர்களை, வேதனம் வழங்கும் தொழில்களுக்காகச் சேர்த்துக்கொள்வது, தண்டனையும், தண்டனை பெறக்கூடிய குற்றமாகவும் ஏற்றுக்கொள்ளக்கூடிய ... அத்துடன்

அடங்கள் உடன்படிக்கை. 1996 செப்டம்பரில் இதனை ஏற்றுக்கொண்ட நாடுகளின் எண்ணிக்கை 41 ஆகும்.

குறைந்த வயது சிபாரிசு இல. 146 இதற்கமைய தொழிலில் ஈடுபடக்கூடிய வயது 15 ஆக வேண்டுமென அங்கத்துவ நாடுகள் கேட்டுக் கொள்கின்றன. சட்டப்படி கட்டுப்பாடு இல்லாவிட்டாலும், அங்கத்துவ நாடுகள் நடைமுறைப்படுத்த வேண்டுமென கடுமையாக கோரிக் கொள்கின்றன. 146வது சாசனமும் மற்றும் இந்த சிபாரிசும் சிறுவர் ஊழியர் தொடர்பான முறையான வெளியீடாகக் கணிக்கின்றன.

1989

*சிறுவர் உரிமை பற்றிய சாசனம்*

தமது சமூகத்தில் வாழும்போது அவர்களது வாழ்க்கையைப் பாதுகாப்பதற்கும், அபிவிருத்திக்கும், பாதுகாப்பு மற்றும் பங்கு பற்றுதலுக்கான, பிரிக்க முடியாத சிவில், அரசியல், பொருளாதார, சமூக கலாசாரம் போன்ற சகல பிரிவுகளும் அடங்கிய சிறுவர்களின் சகல உரிமைகளையும் உள்ளடக்கிய சாசனமாகும். சிறுவர் உரிமைகள், அவர்களது இந்த வகை நடைமுறைகள் தொடர்பானவர்கள் இந்த சாசனத்தினால் சிறுவர் ஊழியத்தைப் பயன்படுத்தல் அதன்மூலம் ஏற்படுகின்ற தாக்கங்களும் பிரச்சினைகளும், கல்வி, சுகாதாரம் போஷாக்கு, பொழுதுபோக்கு சமூக பாதுகாப்பு, மற்றும் பெற்றோர்களின் பொறுப்பு ஆகியன பற்றி இதன்மூலம் கவனஞ் செலுத்தப்படும். இதன் அடிப்படைக் கொள்கையாவது, சகல செயற்பாடுகளின்போதும், பிள்ளைகளின் நன்மை பற்றி, முழுமையான கவனத்தைச் செலுத்துவதாகும். 32வது அத்தியாயம் மூலம் பிள்ளைகளின் சுகாதாரம், கல்வி முன்னேற்றத்திற்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தக்கூடிய சகல துறைகளிலிருந்தும் பாதுகாப்பைப் பெறுவதற்குப் பிள்ளைகளுக்குள்ள உரிமை ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. அந்த சாசனத்தினூடாக பிள்ளைகள் தொழிலில் ஈடுபடக்கூடிய குறைந்த வயதெல்லையைத் தீர்மானிப்பதற்கும், அவர்களது தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கும், வேலைத்தளங்களில் உள்ள வசதிகளை கட்டுப்படுத்துவதற்கும் அரசுகள் பங்காளிகளாக உள்ளன.

1996 செப்டெம்பரில் இதனை ஏற்றுக் கொண்ட நாடுகளின் எண்ணிக்கை 187 ஆகும்.

1996

இச்சைப்படுத்தி சிறுவர் உழைப்பைப் பயன்படுத்துவது தொடர்பான புதிய சாசனம் அல்லது பொறுக்கமுடியாத மட்டத்திலுள்ள சிறுவர் உழைப்பைப் பயன்படுத்துவதை நீக்குவது பற்றி கலந்தாலோசிப்பதற்கு சர்வதேச தொழிலாளர் அமைப்பு பிரேரிக்கின்றது. 1998.

(அனுசரணை யுனிசெப்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாலியல் வணிகத்துறைக்குச் சிறுவர்களைப் பயன்படுத்தல்

## சர்வதேச நிலை

***பி**ல்லியன் கணக்கில் டொலர்களைச் சம்பாதிக்கும், சட்டத்திற்கு மரணான தொழிலாகசெ செயற்படும் சிறுவர்களை வணிக மட்டத்தில் பாலியல் தொழில்களுக்குப் பயன்படுத்தி, நிலையையும் அது பற்றிய உண்மையான தரவுகளையும பெற்றுக்கொள்வது கடினமாகவுள்ளது. ஆனால் அரசசார்பற்ற நிறுவனங்களின் மதிப்பீடுகளுக்கமைய பிரதி வருடந்தோறும் குறைந்த பட்சம், ஒருமில்லியன் பெண்பிள்ளைகளை இதில் ஈடுபடுத்தி, தாசித் தொழிலுக்குத் தள்ளப்படுகிறது. அதேபோல, கணிசமான ஆண்பிள்ளைகளும் இதற்கு வருடந்தோறும் ஆளாக்கப்படுகினறனர்.*

முன்னேற்றமடைந்துவரும் நாடுகளில் உள்ள சிறுவர் தாசித் தொழில் பற்றி வெளிவரும் வெகுசனத் தொடர்புச் செய்திகள் ஒரே விதமான தகவல்கள் வெளிவருகின்றன. அதாவது செல்வம் தோழுத்த வெளிநாட்டவர் அவ்வந்நிய நாட்டுப் பிள்ளைகளை பாலியல் செயற்பாடுகளுக்காகப் பணம்செலுத்திப் பெறப்பட்டவையே ஆகும். ஆனால் உலகம் முழுவதும் பாலியல் செயற்பாடுகளுக்காகப் பயன்படுத்தப்படும். இப் பிள்ளைகளை அதற்காகப் பயன்படுத்துவது, அதே நாட்டில் சகல சமூக மற்றும்பொருளாதார பின்னணியில் வரும் ஆண்கள் மூலமே. சர்வதேச கவனத்தை அதிகமாக ஈர்த்துள்ளது முறறாக இல்லாவிட்டாலும், முக்கியமாக செல்வந்த நாடுகளிலிருந்து, பிரேசில் டொமானியன் குடியரசு, தாய்லாந்து, மற்றும் ஏனைய நாடுகளிலுள்ள பிள்ளைகளுடன் பாலியல் தொடர்பிற்காக ஒய்வு நேரங்களைக்கழிக்கவரும்பாலியல் உல்லாசப பயணிகள் பற்றியே.

ஆனால் தமது நாடுகளிலே உள்ளோரின் பாலியல் விருப்பை நிறைவேற்றும், சிறுவயதிலுள்ள பெண் பிள்ளைகள் பற்றியும், எமது கவனத்தைச் செலுத்துவது அவசியம். தொழினுட்ப நாடுகளிலும் சிறுவர் தாசித் தொழில் விசாலமாக வியாபித்துள்ளது. ஐக்கிய அமெரிக்காவில் மாத்திரம் ஒரு லட்சம்பேர்களை இதிலே ஈடுபடுத்தியுள்ளர். வணிக ரீதியாக பாலியலில் பயன்படுத்துவதற்கான பிள்ளைகளுக்கும் வேறு விதமான உழைப்பை சூரையாடுவதிலும், நேரடித் தொடர்பு உள்ளது. இதிலுள்ள ஆபத்தும் மிகத்தெளிவானது. நேபாளத்தில் கம்பளித் தொழிற்சாலைகளில் கடமைபுரிவோரில 50% த்தினர் சிறுவராவர். இவர்கள் தொழிற்சாலை உரிமையாளர்களின் பாலியல் தேவைகளுக்குப் பயன்படுத்துவது மாத்திரமன்றி, இந்தியாவில் தாசி விடுதிகளுக்கு ஆட்சேர்க்கும் நிலையங்களாகவும் உள்ளது. அவர்களினால் அல்லது, தரகர்கள் மூலம் தமது எஜமான்கள் இவ்வாறான கடமைகளில் ஈடுபடுத்துவது பற்றி எதிர்ப்பு தெரிவிப்பதற்கு அவர்களுக்கு சக்தியில்லை.

பட்டணத்தின் தாசி விடுதிகளுக்குப் பெண்பிள்ளைகளைச் சேர்க்கும்தரகர்கள் கிராமங்களில் உள்ளனர். அவர்கள் வறிய குடும்பங்களுக்குக் கடன் வழங்குகிறார்கள் அதனைப் பெண்பிள்ளைகளின் ''உழைப்பிலிருந்து'' ஈடு செய்ய வேண்டுமென நிபந்தனை விதிக்கின்றனா. எது எவவாறாயிருப்பினும், இவர்கள் அச்சிறார்களைத் தூர இடங்களுக்கு, சில சமயம் வெளி நாடுகளுக்கும் கூட எடுத்துச் செல்கின்றனர். அநேகமாக அவர்களின் பாதுகாப்பிற்குள்ள சட்டங்களே அவர்களுக்கு எதிராக குற்றஞ் சுமத்துகிறது. சட்ட விரோத பயணிகளாகக் கருதி வெளியேற்றப்படுதல். அல்லது வேறுவிதத்தில் தமது சொந்த நாடுகளுக்கு திரும்பியபோது, தமது குடும்பம் மற்றும் சமுதாயத்தின் நிந்திப்புகளுக்கும் ஆளாகின்றனர். அவர்களைக்கவனியாது விடுவது. சந்திப்பதைத் தவிர்த்துக் கொள்வது, போன்றவற்றிற்கு முகங்கொடுக்கும் அவர்களுக்கு, தாதி விடுதிகளுக்கு செல்வதை விட, மாற்று வழிகளில்லை.

வணிக பாலியல் சூரையாடுதலுக்கு ஆளாகி உடல் உள பாதிப்பு உண்டாகி, பாரிய அளவிலான உழைப்பு சூரையாடும் நிலைக்குத் தள்ளப்படுகின்றனர். அதிக சம்பளத்தைப் பெற்றாலும், குறைந்த நேர சேவை செய்தாலும், நாள்தோறும் இவர்கள், சுகாதார பாதிப்புக்குள்ளாகும். அச்சுறுத்தலிலே உள்ளனர். சுவாச நோய்கள், நோயெதிர்பு சக்தி குறைந்த நோய்கள், பாலியல் தொடர்பான தொற்று நோய்கள், தேவையற்ற கருத்தரிப்பு, போதைப் பொருட்களுக்கு ஆளாதல் போன்ற அபாயங்களும் ஏற்படும். அது மாத்திரமல்ல. சண்டை, சச்சரவு அவநம்பிக்கை, வெட்கம், நிராகரிப்பு, போன்ற நிலைகளுக்கும் ஆளாகின்றனா. ''எவரும் எம்முடன் பழகுவதற்கோ எம்முடன் உள்ளோரைப் பார்ப்பதற்கோ விரும்புவதில்லை. சமுதாயத்திலே எமக்கு மரியாதையான நிலையில்லை'' தாசித் தொழிலில் ஈடுபட்ட 15 வருட செனகால் நாட்டுச் சிறுமி ஒருத்தி இவ்வாறு கூறியுள்ளார்.

சிறுவர் உழைப்பைச் சூரையாடுவது மற்றும் இத்துறை தொடர்பாகவுள்ள தவறான சிக்கலான நிலைமைகளை சமூகம் திறம்படப் புரிந்துகொள்வது மிக முக்கியம். இக்குற்றங்களை எவர்மேலும் சுமத்தமுடியாது. பிள்ளைகளைச் சூரையாடுவதற்கு ஆளாக்கும்பிம்பியர்கள் மற்றும்தரகர்கள் அல்லது பிள்ளைகளுக்கே குற்றத்தைச் சுமத்தமுடியும். ஆனால் வணிக மட்டத்தில் சிறுவர்களைப் பாலிய

லில் ஈடுபடுத்துவதிலிருந்து, எந்தவொரு சமுதாயமும் விடுவிக்க முடியாது. இதற்கிடையில் குடும்பத்திற்கும், அநேகமாக பிள்ளைகளினஅ பராமரிப்பு, அவர்களில் முன்னேற்றத்தை ஏற்படுத்தும் பொறுப்பு,

***சிறுவர் உழைப்பைச் சூரையாடுவது மற்றும் இத்துறை தொடர்பாகவுள்ள தவறான சிக்கலான நிலைமைகளை சமூகம் திறம்படப் புரிந்துகொள்வது மிக முக்கியம்.***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களுக்கே உண்டு. பாலியல் துஷ்பிரயோகம் எனும் குற்றத்திற்குப் பிள்ளைகளைப் பயன்படுத்துவதற்கான குற்றச்சாட்டு அர்களையே சாரும். பிள்ளைகளை நிந்தித்தல் பாலியல் ரீதியாகத் துன்புறுத்துதல், வணிக மட்டத்தில் பாலியல் துஷ்பிரயோகத்திற்கு முன்பே நடைபெறுகிறதென ஆய்வுகள் மூலம் தெரியவந்துள்ளன. பணம் கொடுத்து, பாலியல் உறவு கொள்பவர்கள் தவிர இவர்களைக் கொண்டு செல்வோர்கள் தரகர்கள், பிரதிநிதிகள் போன்றோர் இதன் மூலம் இலாபத்தைப் பெறுவோராவார். தாசி விடுதிகள் நடாத்தும், தொழில் ரீதியாகக் குற்றஞ் செய்வோர்களின் அமைப்புகளும் உண்டு. பாலியல் சுற்றுலா அதற்காக ஆண், பெண் பிள்ளைகளைப் பெற்றுக்கொள்ள முடியுமென்ற ஊக்கமளிக்கும், வெளியீடுகளை வெளிப்படுத்தும் வியாபாரிகளும் உள்ளனர். உண்மையான நிலையைக் கண்டும் காணாதது போல இருக்கும் சோம்பேறி, மற்றும் பொறுப்பற்ற அதிகாரிகளும் இதற்குப் பொறுபபாக இருப்பர்.

இவர்களைத் தவிர, சிறுவர், பாலியல் வியாபாரத்திற்கு ஊக்கமளிக்க-க்கூடியவர்களும் திரை மறைவில் உள்ளனர். பெண்பிள்ளைகளுக்கு ஏற்படுத்தும் இம்சைளை சரியான கோணத்தில் பார்ப்பதைத் தவிர்க்கும் சமுதாயத்தில் பதிந்துள்ள பாலியல் மாற்றங்களும் இதற்குக் காரணமாகும். இடமாற்றத்திற்கு உற்சாகமளித்தல், குடும்பங்களை சீரழித்தல், பாதுகாப்பு நிலைகளை இல்லாதொழித்தல், ஏழை-பணக்காரர் இடைவெளிகளை மேலும் அதிகரிப்பதற்கு முயற்சிக்கும் வியாபார சக்திகளும் இதற்குப் பங்காளிகளாவார். ஆயுதபோராட்டம், யுத்தங்களை உண்டுபண்ணி, அழிவை ஏற்படுத்துவதும் பிள்ளைகளினஅ வாழ்க்கையை சூரையாடுவதற்கு இதுவும் ஒரு காரணமாகும்.

பல ஆண்டுகளாக அமைதியான கலாச்சாரங்களுக்கு இடையிலுள்ள சதியாயிருந்த பிரச்சினைகள் தற்போது வெளியாகியுள்ளன. 1996 ஆகஸ்ட் மாதத்தில் சுவீடனில் இடம்பெற்ற ''சிறுவர்கள்பாலியல் துஷ்பிரயோ-கங்களுக்கு ஆளாக்குவதற்கு எதிரான மகாநாட்டின்போது'' இது முதலில் உலகிற்கு தெரிய வந்தது. மகாநாட்டில் பங்குபற்றியோ தயாரித்த செயற்பாட்டுத்துத் திட்டம் அந்தந்த நாடுகளுக்கு இப்பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான வழிகாட்டல்களைப் பெற்றுக் கொடுத்தது.

(அனுசரணை யுனிசெப்)

# சிறுவர் உரிமைகள் பற்றிய சாசனம் மற்றும் சிறுவர்களைப் பாலியல் துஷ்பிரயோகத்தில் ஈடுபடுத்தல்

**தாசித் தொழில் பாலியல் காட்சிகளுக்காகப் பிள்ளைகளைப் பயன்படுத்துதல், வறியநிலை ஆசைகள் குறைந்த செலவில் பாலியல் இச்சைகளைப் பூர்த்தி செய்வதற்கான கேள்விகளினால், வளர்ச்சியடையும் ஒரு தொழிலாகும். அவை பணக்கார நாடுகளைப் போலவே, வறிய நாடுகளிலும் இலட்சக்கணக்கான ஆண், பெண் பிள்ளைகளை அழித்துக் கொண்டு இருக்கிறது. அதனை ஒழித்துக் கட்டுவதற்கு தேசிய மற்றும் சர்வதேச அடிப்படையில் எடுக்கப்படும் நடவடிக்கைகளோ மிகக் குறைவே.**

சில நாடுகளில் ஏழு வயதுச் சிறார்களை தியாள், பெற்றோர், பாதுகாவலர், ஆசிரியர்கள் பிரதிநிதிகளாகலாம். புனித அமைப்புகளாக, மாறுவேடம் கொண்ட நிறுவனங்களுக்கு இவர்கள் விற்கப்படுகின்றனர். உடல் உள ரீதியாக அடிமையான இச்சிறார்களை பலவிதமான ஆண்களினால், சிலவேளை பெண்களும் கூட வாடகைக்கு அமர்த்தி, துஷ்பிரயோகங்களில் ஈடுபடுத்கிறார்கள்.

அநேகமாக இவ்வாறு செய்பவர்கள் அந்நாட்டைச் சேர்ந்தவர்களே, ஆனால் சில நாடுகளில் இளம் வயதுப் பிள்ளைகளைப் போலவே ஆண்பிள்ளைகளும் பாலியலில் ஈடுபடுவதற்காக உல்லாசப் பயணிகளைக் கவரும் வகையில் வெளிநாடுகளுக்கு விற்பனை செய்யப்படுகின்றனர். தென் மற்றும் தென்கிழக்கு ஆசிய நாடுகளுட் சில ஐரோப்பிய உல்லாசப்பயணிகளை ஈர்த்தெடுக்கும் காந்தமாக இச்சிறார்களைப் பயன்படுத்துகிறார்கள்.

தாசித் தொழிலில் ஈடுபட்ட சிறுவர்கள் எச்.ஐ. வியினால் பாதிப்புற மாட்டார்கள் என்ற தப்பபிப்பிராயம் நிலவுகிறது. அதனால் பாலியல் தொழிலுக்காகச் சிறுவர்களுக்கான கேள்விகள் அதிகரித்துள்ளதாக அன்மையில் வெளியான அறிக்கைகள்

*சில நாடுகளில் ஏழு வயதுச் சிறார்களை தியாள், பெற்றோர்,பாதுகாவலர், ஆசிரியர்கள் பிரதிநிதிகளாகலாம். புனித அமைப்புகளாக, மாறுவேடம் கொண்ட நிறுவனங்களுக்கு இவர்கள் விற்கப்படுகின்றனர்.*

கூறுகின்றன இது உண்மையற்ற தெனஅபது கவலைக்குரிய விடயமாகும். இதனால் பாலியல் துஷ்பிரயோகங்களுக்குள்ளான பிள்ளைகளின் இறப்பு வீதமும் அதிகரித்துள்ளது.

சிறுவர்கள், தாசி மற்றும் பாலியல் தொடர்பில் ஈடுபடுத்தப்படுவதனால், உல்லாசத் துறையில் ஏற்பட்டுள்ள நிலைமையைப் பற்றி ஆராய்ந்த பிரான்ஸ் மதகுருவும், வைத்தியருமாகிய ''பிரெங்கோய் லெபேர்ட்'' இவ்வாறு கூறுகிறார். ''இச்சிறுவர்களுக்கு வாடகையை வழங்குவோர் வெளி உலகிற்கு மதிப்பிற்குரியவர்களாகக் காணப்படுகின்றனர். எமது உலகத்தில் குற்றவியல் செயல்களுக்காக மென்மேலும் தண்டனைகளை வழங்கவேண்டுமென கூறிக்கொண்டு, பாதுகாப்பைப் பற்றி தொழினுட்ப நாடுகளில் தர்மநீதிகளைச் செய்பவர்களும் அவர்களே எனத்தெரியவருகிறது. ஆனால் ஏழைச்சிறார்கள் உதவியற்றநிலையிலிருக் போது, குற்றவியல் செயல்களைச் செய்வதற்கு அவர்கள் தயங்குவதில்லை.

மனித உரிமைகள் பற்றி ஐ.நா. சபையின் குழுக் கூட்டத்தின்போது, அன்மையில் வெளியான அறிக்கையொன்றில், பாலியல் துஷ்பிரயோகங்களுக்குச் சிறுவர்களை ஈடுபடுத்துவோரைப் பற்றி அந்நாடுகளில் சட்டத்தை நிலைநாட்டுவோரின் செயல்கள் உதாசீனப் படுத்தப்பட்டுள்ளதாகத் தெரிய வருகிறது.

இந்த ஆண் பெண் பிள்ளைகளைத் தாசி விடுதிகளிலிருந்து மீட்டெடுப்பதற்கு அவசியமாக இருப்பின் அதற்காகப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொலிஸ் தலையிடுவதற்கான சட்டங்கள் இல்லாமலில்லை. ஆனால் மற்றோருக்கு உதவி செய்வதற்கு முன் வருவதை, தேவையற்ற வேலையைக் கருதுகின்றபடியால், அவர்கள் இதனைக் கண்டும் காணாதது ல இருக்கின்றன். உத்தியோக ரீதியாக அவர்களுக்குக் கிடைக்கின்ற ஊதியம் மிகக் குறைவானபடியால், சட்டத்தைச் செயற்படுத்துவதற்கு கடினமாக உழைக்க வேண்டியதில்லை எனக் கருதுகின்றனர். எவ்வாறாயினும் துஷ்பிரயோகம் அல்லது ஏமாற்றுவதற்கு ஒத்துழைப்பதன் மூலம் இச் செயல்களுக்கு அவர்களது அனுசரணையும் சிலசமயங்களில் இருக்கலாம்.

போலித் திருமணங்கள் பற்றிய, போலியான தஸ்தாவேஜுகளைச் சமர்ப்பித்து, நாட்டின் எல்லையைவிட்டுப் பிள்ளைகளைக் கடத்திச் செல்வது, அல்லது, விற்பனை செய்வது போன்றவை பொதுவான சம்பவங்கள் என அறிக்கைகள் கூறுகின்றன. மேலும் திட்டமிட்டுக் குற்றவியல் செயல்களிலும், காம, பாலியல் செயல்களிலும், பிள்ளைகளை ஈடுபடுத்துவதற்கும், அதன் மூலம் மறைமுகமான இலாபங்களைப் பெறுவதற்கும், போதைப்பொருள் வியாபாரத்திற்கும் நெருங்கிய தொடர்புகள் உள்ளதென அறிக்கைகளிலிருந்து தெரியவருகின்றன.

அநேகமாக அநாதைகளான குடும்பங்கள், பிரிந்த குடும்பங்கள், குடிப்பழக்கம், மதுபோதைக்கு ஆளான, பெற்றோருள்ள குடும்பங்களின் பிள்ளைகள், மிகப் பாரதூரமான அளவிலே பாதிக்கப்படுகின்றனர். சில தாய்மார் விலைமாதர் தொழிலிலும் ஈடுபடுகின்றனர். பிச்சை எடுத்தல் களவு எடுத்தல், போன்ற செயல்களுடன் போதைப் பொருள் விற்பனை செய்து வீதிகளில் சீவிக்கின்ற சில சிறார்கள் வாழ்க்கை நடாத்துவதற்காக, இலாபகரமான தொழிலாக விலைமாதர் தொழிலில் ஈடுபடுகின்றனர்.

வறிய குடும்பங்களிலுள்ள பிள்ளைகளைச் சிறுவயதிலே வீட்டுவேலைகளுக்கு அடிமைகளாகக் கையளிக்கிறார்கள். அவர்களைச் செல்வம் படைத்தவர்கள் துன்பப் படுத்துகின்றனர் மிகச் சிறியவயதிலேயே சிறுவர்களை 150 அமெரிக்கன் டொலர்களுக்குப் பெற்றோர்களிடமிருந்து பெறப்பட்ட பிள்ளைகளை, தாசி விடுதிகளுக்கு அல்லது வெளியாட்களுக்கு விற்பனை செய்கின்றனர் இவ்வாறான பிள்ளைகள் சிரந்த தொழில்களைச் செய்வதாகப் பெற்றோர்களையும் ஏமாற்றுகின்றனர்.

தென், மற்றும் தென்கிழக்கு ஆசியாவிலுள்ள சில நாடுகளில் இவ்வாறு விலைமாதர் தொழிலில் ஈடுபடுத்தப்பட்ட பிள்ளைகள் ஆயிரக்கணக்கானோர் உள்ளதாக, அரச சார்பற்ற நிறுவனங்கள் கூறுகின்றன.

ஏதேனும் ஒரு கடற்கரையை அண்டியுள்ள ஹோட்டல் ஒன்றில் 16 வயதிற்குக் குறைந்த ஆண்பிள்ளைகள் சுமார் 10 ஆயிரம் பேரளவில் இவ்வாறான தாசித்தொழிலில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது. அவர்களுக்கு சம்பளமாக நாளொன்றிற்கு 1.50 டொலர் வழங்கப்படுகிறது. (சுமார் 100/- ரூபாய்)

சிலவேளை அவர்களுக்கு உணவும் உடைகளும் மாத்திரமே வழங்கப்படுகிறது.

ஆபிரிக்கா மற்றும் இலத்தின் அமெரிக்காவில் சிறுவர் தாசித் தொழில் அதிகமாக உள்ளதெனவும் ஐரோப்பாவிற்கும் ஏனைய இடங்களுக்கு இவர்கள் இரகசியமாக விற்கப்படுவதாகவும் அறிக்கைள் கூறுகின்றன. மத்திய கிழக்கு நாடுகளிலே இப்பிரச்சினைகள் இல்லாத போதிலும், அங்குள்ளோர் இத்தேவைகளுக்காக விசேடமாக தெனஅகிழக்கு ஆசிய நாடுகளுக்குச் செல்கின்றனர்.

கைத்தொழில் நாடுகளில் இத்தொழில் அதிகரித்தமைக்கான காரணம், வறுமை, வீட்டில் ஏற்படுத்தப்படும் துன்புறுத்தல்கள், பொருத்தமற்ற சேவையில் ஈடுபடுத்தப்படுதல், போதைப் பொருள்களுக்கு அடிமையாதல் போன்ற காரணங்களேயாகும் வீட்டை விட்டு ஓடும் பிள்ளைகள் அநேகமாக இந்த ஆபத்தான நிலைக்குத் தள்ளப்படுகின்றனர்.

சிறுவர்களைத் தாசித்தொழிலில் ஈடுதுவோர்களுக்குத் தண்டனை வழங்கும் சட்ட திட்டங்கள் எல்லா நாடுகளிலும் உண்டு ஆனால் அதனைச் செயற்படுத்துவதிலோ பலவீனமே காணப்படுகிறது. மேலும் அதற்கான காரணங்களாகிய உளரீதியானதும் ஏனைய பிரச்சினைகள் தொடர்பான தடைகள் மாத்திரம் வழங்கப்படுவது பொருத்தமானதல்ல, சட்டத்திற்கு முரணான வகையில் சிறுவர்களை இதற்காகப் பயன்படுத்துவது, சமூகப்பிரச்சினையாக இருப்பின், அதனை இல்லாதொழிப்பதற்கும், சட்டத்தை செயற்படுத்துவதிலுள்ள குறைபாடுகளை நீக்குவதற்கும் பொதுமக்கள் முன்வரல் வேண்டும். சட்டப்படி நடவடிக்கை எடுப்பது பயனுள்ளதாகும். அதேபோல, மக்களுக்கு அறிவூட்டுதலும், நிவாரணம் வழங்கக்கூடிய கொள்கைகளும் அவசியமானது. சமூகப் பாதுகாப்பு, நலன்புரிக் கொள்கைகள் மூலம், குடும்பங்களைப் பிரிக்காமல் சிறந்த முறையில், வைப்பதற்கும் பொருளாதாரச் சுரையாடல், பொருத்தமற்ற முறையிலுள்ள தொழில்களில் பிள்ளைகளை ஈடுபடுத்தலைத் தவிர்த்தல், அவர்களின் சிந்தனை வளர்ச்சிக்கான உதவிகளையும் செய்தல் வேண்டும்.

தேசிய மற்றும் சர்வதேச மக்கள் கல்வியும் அவசியம். எப்போதும் பிள்ளைகளின் பெறுமதியையும், மதிப்பையும் ஏற்றுக்கொள்ளல் வேண்டும் பாலியல் தொடர்பான உல்லாசத் தொழில்களை முற்றாக நீக்கிவிடல் வேண்டும் வெளிநாடுகளிலே கைதுசெய்யும் வெளிநாட்டவர்களுக்கு, அந்த நாட்டுச் சட்டத்தின் படி தண்டனை வழங்கவும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

பிள்ளைகளின் வாழ்க்கையைப் பாதுகாத்தல் மற்றும் முன்னேற்றத்திற்கு உறுதுணையான யுனிசெப் நிறுவனம் மற்றும் ஏனைய நிறுவனங்களில் அனுபவங்கள் மூலம், பிள்ளைகளின் இந்த அவலநிலைக்குச் சிறந்தமுறையில் முகங்கொடுக்கும் மாற்றுவழிகள் பல தெரிய வந்துள்ளது.

விலைமாதர் தொழில் மற்றும் பாலியல் காட்சிகளுக்குப் பிள்ளைகளைப் பயன்படுத்துவது போன்ற பல்வேறு குற்றங்களிலிருந்து பிள்ளைகளைப் பாதுகாக்கும் அவசியத்தைப்பற்றி (34ம் பந்தி) சிறுவர் பாதுகாப்பு சாசனத்திலே கவனத்தைச் செலுத்துதல் வேண்டும்.

பிள்ளைகளை விற்பனை செய்தல் இரகசிய வியாபாரம் பலாத்காரமாகக் கடத்திச் செல்லல் போன்ற பிரச்சினைகளிலும் கவனம் செலுத்தப்படுகிறது (35ம் பந்தி) பெற்றோர் சட்டப்படியான பாதுகாவலர்களுக்குப் பிள்ளைகளைப் பெறுப்பளித்து, அவர்களின் பராமரிப்பில் இருக்கும்போது, பாலியல் செயல், சட்டத்திற்கு முரணான செயல்களில் ஈடுபடுத்துவது பற்றி 19ம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது

சமவாயத்தை அங்கீகரித்த நாடுகளினால் இவ்வாறான சகலவித நிலைமைகளுக்கும் முகங்கொடுத்துள்ள பிள்ளைகளைப் பாதுகாப்பதற்காக போதிய சட்டங்களையும் மற்றும் சட்ட அமுலாக்களைச் செயற்படுத்தும் நடவடிக்கைகள் பற்றி, தவறான வழிகளைப் பயன்படுத்துவதைத் தடுப்பதற்காகவும் அவ்வாறான நடவடிக்கைகளினால் பாதிப்புற்றோர்களுக்கு, பரிகாரமளிப்பதற்கான வேலைத் திட்டங்களை ஒழுங்கு செய்வதற்கும் கவனத்தைச் செலுத்துதல் வேண்டும்.

*(அனுசரணை யுனிசெப்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர் துஷ்பிரயோகமும் இலங்கைச் சமுதாய சீர்கேடுகளும்

கம்பஹா சுகாதாரக் கல்வி அதிகாரி
எஸ்.எம். தயாரத்ன

பல உயிரினங்கள் தமது குஞ்சுகளை குஞ்சுப் பருவத்தைக் கடக்கும் வரை பாதுகாக்கின்றன. அதிலும் முன்னேற்றமடைந்த விலங்காகிய மனிதனின் பிள்ளையோ நீண்டகாலத்திற்கு உணவூட்டிப் பாதுகாக்கப்படும் ஓர் விலங்காகும். ஆனால் மனித வாழ்க்கை வட்டமானது முன்னேற்றமடையும்போது, சிறார்களுக்குக் கிடைக்க வேண்டிய கூடிய உரிமைகள் இழக்கப்படுகின்றன. அத்துடன் அச்சிறார்கள் வளர்ந்தோரின் இச்சைக்கு ஆளாவதும் அதிகரித்துக் கொண்டே செல்கிறது. இலங்கையிலும் சிறுவர் துஷ்பிரயோகம் தேசிய சீர்கேடாகப்போகும் அறிகுறிகள் காணப்படுகின்றன.

18 வயதிற்குட்பட்டோர்களுக்கு உடல், உள, சமூக மட்டத்தில் பாதிப்பு ஏற்படுமாறு செயற்படுவதும், சிறுவர்களுக்குக் கிடைக்க வேண்டிய, உணவு, பாதுகாப்பு, அன்பு, ஆதரவு போன்ற தேவைகளை துஷ்பிரயோகத்துக்களும் வழங்காது இருப்பதும் அல்லது தடை செய்வதும் சிறுவர் துஷ்பிரயோகம் எனக்கருதப்படும்.

சிறுவர் பாதுகாப்பு ஆணையாளரின் அறிக்கையின்படி, 1995, 1996 ஆம் ஆண்டுகளிலே இலங்கை 10, 289 சிறுவர் துஷ்பிரயோகங்கள் இடம்பெற்றுள்ளன. இதில் 56 கொலைகளும், 415 பாலியல் அபராதங்களும் 62 பாலியல் வல்லுறவுகளும் உள்ளடங்குகின்றன. ஏனைய சம்பவங்களுள், சிறுவர்கள் துன்புறுத்தப்படுதல், வீட்டு வேலைகளுக்காக அமர்த்தி கொடுமைப்படுத்தல் ஆகியன சட்டத்திற்கு தெரியப்படுத்தப்படாதவை, இதே போல் 7 மடங்கு இருக்கலாமென அவ்வறிக்கைகள் கூறுகின்றன. பிள்ளை, தனது தந்தையாலே கற்பழிக்கப்பட்ட துக்ககரமான நிகழ்வுகள் 15 உள்ளன. நெருங்கிய உறவினர்களால் ஏற்படும் பாலியல் துஷ்பிரயோகங்களை குடும்ப ஒற்றுமை கலையும் என்பதாலோ, வெட்கத்தினாலோ, சட்டத்தின்கீழ் கொண்டுவரப்படாமல் மறைக்கப்படுகின்றன.

சிறுவர் துஷ்பிரயோகங்களுக்கு சாதகமாகும் தற்கால இலங்கையின் சுற்றாடல் எவ்வாறு அமைந்துள்ளது என ஆராய்வதே இவ்வாக்கத்தின் நோக்கமாகும்.

### யுத்தம் சூழ்ந்த பிரதேசம்

இலங்கையின் வடகிழக்கு யுத்தப்பிரதேசத்திலுள்ள சிறார்களின் பெரும்பாலானோர் இவ்வாறு பாதிக்கப்பட்டுள்ளனர். இது, யுத்தம் நடைபெறும் எப்பகுதியிலும் காணக்கூடிய சம்பவமாகும். நீண்டகாலமாக யுத்தம் நடைபெறும் போது குடும்பமும் உறவும், திருமண வாழ்க்கை, சமயவழிப்பாடுகள், பாடசாலைக் கல்வி போன்றவற்றின் அமைப்புகள் கட்டாயமாக வீழ்ச்சியடையவோ அல்லது செயலிழக்கவோ கூடும்.

யுத்தத்தின் போது மக்கள் இடப்பெயர்வு, சொத்துக்களை இழத்தல், அநாதைகளாகுதல், குடும்பத்தின் முக்கிய உறுப்பினர்கள் இறத்தல், அல்லது அங்கவீனமடைதல், குடும்ப உறுப்பினர் படைகளிலே சேர்ந்துகொள்ளல் போன்ற காரணிகளால் முன்கூறியவை கவனியாது, கைவிடப்படவோ அல்லது மறக்க வேண்டிய நிலைமையோ ஏற்படும். இவ்வாறான வீழ்ச்சிகளினால் பாதிப்படைவது, பெண்களும், பிள்ளைகளுமேயாவர். இன்று யுத்தம் சூழ்ந்த பிரதேசத்தில் உண்மையான நிலைமை புள்ளி விபரங்களிலே காட்டப்படாவிட்டாலும், கிடைக்கும் செய்திகளுக்கேற்ப இவ்வாறு குறிப்பிடலாம். பிள்ளைகளின் கல்வி வீழ்ச்சியடைந்துள்ளது. விசேடமாக தமிழ்க்குழுக்களுக்கு பிள்ளைகள் பயங்கரவாதிகளினால், போராடுவதற்கோ, அல்லது அவர்களது பாசறைகளிலே வேலை செய்வதற்கோ, அல்லது அலுவலகங்களுக்காக, கொள்ளையடிக்கவோ, அல்லது உளவு பார்ப்பதற்கோ பயன்படுத்தப்படுகின்றனர். அதேபோல விரிவுரைகள் படக்காட்சி போன்றவற்றின் மூலம், பயங்கரச் செயல்களில் ஈடுபடுத்துவதற்காக உளரீதியில் அவர்களைத் தயார்படுத்துதல்.



அதேபோல யுத்தம் காரணமாக பெற்றோரின், பாதுகாப்பு, அன்பு, ஆதரவை இழத்தல், பயத்திற்காளாகுதல், இடம் பெயர்ந்த முகாம்களில் சிறுவயதிலேயே பாலியல் உறவுகளை ஏற்படுத்துதல், அதனால் அவர்களும் பெற்றோர்களாதல், பாலியல் துஷ்பிரயோகப்படுத்தல், பணியாட்களாக வேலையிலமர்த்தல், தொழிலுக்காகப் பிச்சையெடுத்தல் போன்ற அறிக்கைகள் கிடைக்கப் பெற்றுள்ளன.

15 வருடகாலம் நீடித்த யுத்தப் பிரதேசத்தில் சில பிள்ளைகள் பிறந்தும், வாழ்ந்தும் இருக்கின்றனர். அவ்வாறான சூழலில் உருவான பிள்ளைகள் பிற்காலங்களில் சமுதாயத்திற்குப் பயனுள்ளவர்களாக மாறுவார்களா? என்பது சந்தேகத்திற்கிடமானது. விற்றான அடிப்படையில் இவ்வாறு பாதிப்புற்ற சமுதாயத்தில் மீண்டும் சமாதானம் ஏற்பட்டாலும் சீரழிந்த அமைப்புகள் நல்ல நிலைக்கு வரும் என்பதும் சந்தேகத்திற்குரியதே.

### தாயின் பிரிவு

தாயை நீண்டகாலம் பிரிந்து இருப்பதும் சிறுவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துஷ்பிரயோகங்களுக்கான இன்னுமொரு காரண- மாகும். எக்காரணத்தைக் கொண்டும் தாய் நீண்டகாலம் பிரிந்திருப்பது, அக்குடும்ப உறுப்பினர்களுக்கு பாரிய தாக்கத்தை உண்டு பண்ணும். விசேடமாக பிள்ளைகளுக்கும், கணவன், உறவினர்களுக்கும், ஒரு தாயினால் நிறைவேற்றப்பட வேண்டிய பொறுப்புக்கள், கைவிடப்படுகின்றன. அவ்வாறான குடும்பம் தாயைப் பிரிந்த குடும்பமாகக் கணிக்கப்படும். உண்மையிலேயே அதை சீரழிந்த குடும்பமாகக் கணிப்பதே பொருத்த மானது. பிள்ளைகளின் வாழ்க்கையைப் பொருத்தமானதாக ஆயத்தஞ் செய்தல், நல்ல பழக்க வழக்கங்களைப் புகட்டுவது, சமுதாயத்தில் நல்லது, கெட்டவைகளை இனங்கான வைத்தல், பிள்ளையின் உடல்; உள வளர்ச்சிக்குத் தேவையானவற்றை வழங்குதல், பிள்ளையின் அன்பு, பாதுகாப்பை உறுதிப்படுத்துதல், கணவனின் கடமைகளிலே பங்களிப்பு வழங்குதல், போன்றன தாயின் மூலமாக நிறைவேற்றப்படவேண்டிய முக்கிய செயற்பாடாகும். இவை கிடைக்காத பிள்ளைகள், துஷ்பிரயோகங்களின்-பால் திசை திரும்புவதற்கும் முக்கிய காரணமாகுமென சமூக விஞ்ஞானிகள் கூறுகின்றனர். இலங்கை சமுதாயத்தில் தாயில்லாததனால் ஏற்படும் பிரச்சனை எவ்வளவு தூரம் சிறுவர் துஷ்பிரயோகங்களுக்குக் காரணமாய மைகிறது என்பதை ஆராய்வோம்.

1975ஆம் ஆண்டிற்கு முன்பு, தாயை விடடுப் பிரிந்திருப்பதற்கு முக்கிய காரணமாயிருந்தது, தாய் மறுமணஞ் செய்து, பிரிந்திருத்தல், அல்லது இறந்து விடுவதாகும். ஆனால் கடந்த இரண்டு தசாப்தங்களில் முக்கிய காரணமாகத் தலைதூக்கியது. தொழிலுக்காகத் தாய் வெளிநாடு செல்லல், அல்லது, அடிக்கடி வீட்டுக்கு வரமுடியாத முறையில் தூரத்தில் தொழில் புரிவதாகும்.

விசேடமாக மத்திய கிழக்கு நாடுகளில் தொழில் வாய்ப்பு கிடைத்ததும், சுதந்திர வர்த்தக வலயம் அமைக்கப்பட்டதாலும் நாட்டின் எலலாப் பாகங்களிலிருந்தும் பல பெண்கள் நீண்ட காலமாகக் குடும்பத்திலிருந்து பிரிந்து வாழப்பழகினார்கள். இதனால் திருமணமான பெண்கள் பாரிய பிரச்சனைகளுக்கு ஆளானார்கள். ஆண்டொன்றுக்கு சுமார் 40,000 பெண்கள் வேலைகளுக்காக வெளிநாடு செல்கின்றனர். அதில் 20% திருமணமானோர். இவ்வாறு வெளிநாடு சென்றோர்களுள் 50% மான குடும்பங்கள் சீர்குலைந்துள்ளன. அநேக பெண்கள் இவ்வாறு வெளிநாடு செல்லும் போது தமது பிள்ளைகளை, கணவர், அல்லது உறவினரிடம் பொறுப்பளித்து விட்டுச் செல்கின்றனர். ஆனால் தாயைப் பிரிந்த இவ்வாறான பிள்ளைகளுள் பெரும்பாலானோர் அடிக்கடி தமது வதிவிடயங்களை மாற்றி வெவ்வேறு உறுப்பினர்களின் கீழ் வசிக்கிறார்கள் என ஆய்வுகள் கூறுகின்றன.

### வளர்ப்புத்தாய்

வதிவிடத்தையும், பாதுகாவலரையும் மாற்றுவதன் காரணத்தினால், அப்பிள்ளைகளுள் அனேகமானோர் பாடசாலை செல்வதில்லை. இன்னுமொரு சாரார் பிறரின் பிள்ளைகளைப் பார்ப்பதற்கோ, வீட்டு வேலைகளுக்கோ, அல்லது கட்டாகாலியாகத் திரிவதற்கோ உட்படுகின்றனர். மேலும் இவ்வாய்வுகள் மூலம், வயதுவந்த பெண்பிள்ளைகளின் தாய்மார்கள், வெளிநாடுகளிலிருந்து அனுப்பும் பணத்தை, கணவர்மார் மதுவிற்கோ, கெட்டநடத்தைகளுக்கோ பயன்படுத்துக்கின்றனர். சில ஆண் பிள்ளைகள் குடிப்பழக்கத்திற்காளான சந்தர்ப்பங்களும் உண்டு. இதில் மிகக் கவலைக்கிட்மான சம்பவம் யாதெனில் வெளிநாடு செல்லும் தாய் கணவரிடம் பொறுப்பு கொடுத்ததன் மகளைக் கற்பழித்ததேயாகும்

1985 மார்ச் 15-30 தெசதிய எனும் வெளியீட்டில் இது மேலும் தெளிவாகியுள்ளது. "நல்ல சுகதேகியான 10 வயதையுடைய சானக லொத்தர் சீட்டு விற்பனையிலீடுபட்டார். அப்போது ஒரு நாள் அவர்" எனது தாய் மிடிலீஸ்ட் சென்றுவிட்டார். தகப்பன் நன்றாகக் குடிக்கிறார். சகோதரிகள் சிறியதாயிடம் உள்ளனர். எங்களின் வீட்டுக்கு எவருமே செல்லவதில்லை. தகப்பனின் மதுப்பழக்கமே காரணமாகும். சிறிவர்தன அண்ணாவின் அறையிலே நான் இரவு நேரத்தில் தூங்குகிறேன். நான் பாடசாலை செல்வதில்லை. 5ஆம் வகுப்பு வரையிலுமே பாடசாலை சென்றேன். அம்மா அனுப்பும் பணத்தில் அப்பா குடிக்கிறார். சானக, தனது தாய்க்கு எழுதிய கடிதத்தின் உறையிலே தாயின் விலாசத்தை எழுதித்தருமாறு கேட்டான் விலாசத்தைத் தேடுவதற்காக அவன் வீதியைக்கடந்து புறக்கோட்டையில் ஒழுங்கையினூடாகச் சென்று ஒரு நாட்டைப் பிடித்த மகிழ்ச்சியுடன் மிக வேகமாக ஒடி வந்தான். அவனின் கடிதமோ மிகுந்த துக்கத்தைத் தரக்கூடியது அதில் எழுதப்பட்ட வாக்கியங்களுட் சில பின்வாறு: "தங்கைக்கு இருமல் ஏற்பட்டு வைத்தியசாலையில் சேர்க்கப் பட்டுள்ளார். சிறியதாய் தங்கையைக் கூட்டிச் சென்றுவிட்டார். அம்மா! நீங்கள் சிறியதாயாருக்கே பணத்தை அனுப்பி வைக்கவும் அப்பாவுக்கு அனுப்ப

*சமூக விஞ்ஞானத்திற்கேற்ப இலங்கைச் சமுதாயம் பட்டினங்களில் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை நோக்குவோம். 20ம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் மிக மெதுவாகவும், இறுதியில் மிக வேகமாகவும் நடைபெற்றது. கொழும்பு, யாழ்ப்பாணம் போன்ற நகரங்களுக்கு செல்வதையும் விட பட்டினத்தேவைகளும் உட்கட்டமைப்பு வசதிகள் விருத்தி செய்யப்பட்ட பல கிராமங்கள் பட்டினங்களாக மாறின.*

வேண்டாம். அவர் கடுமையாகக் குடிக்கிறார் அவர் எங்களை அடிக்கவுஞ் செய்கிறார். அம்மா எனக்கு டீசேர்ட் ஒன்றும் இடுப்புப்பட்டி ஒன்றும் அனுப்பிவையுங்கள்.

இலங்கைச் சமுதாயத்தில் தாயின் பிரிவினால் ஏற்படும் பிரச்சினைகளுள், இன்னுமொரு விளைவு யாதெனில் அதிக கவனஞ்செலுத்தப்படாத சிறுவர்களைப் பொருத்தமற்ற செயல்களில் ஈடுபடுத்துவதேயாகும். குடும்பத்திலே மூத்த பிள்ளை, (அநேகமாக பெண்பிள்ளை) ஏனைய பிள்ளைகளைப் பராமரிப்பதை ஏற்றுக்கொள்கிறார் தாய் பிரிந்த பின்பு பாடசாலை செல்லாது, வீட்டில் நின்று, உணவுசமைத்தல் உடை துவைத்தல் சிறுவர்களைப் பராமரிப்பது போன்ற வேளைகளைச் செய்யும், இளம் வயதுடைய பெயரளவிலேயுள்ள தாய்மார்களைப்பற்றி அறியக்கூடிய தாயுள்ளது.

### பட்டினத்தின் விருந்தாளிகள்

சமூக விஞ்ஞானத்திற்கேற்ப இலங்கைச் சமுதாயம் பட்டினங்களில் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை நோக்குவோம். 20ம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் மிக மெதுவாகவும், இறுதியில் மிக வேகமாகவும் நடைபெற்றது. கொழும்பு, யாழ்ப்பாணம் போன்ற நகரங்களைக்காட்டிலும் விட பட்டினத்தேவைகளும் உட்கட்டமைப்பு வசதிகள் விருத்தி செய்யப்பட்ட பல கிராமங்கள் பட்டினங்களாக மாறின.

விசேடமாக அரசாங்கத்தின் திறந்த பொருளாதாரக் கொள்கை, உல்லாச பிரயாணத் தொழில், சுதந்திர வர்த்தக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலயங்கள் போன்ற அரசியற் கொள்கைகள் இம்மாற்றங்களுக்குக் காரணமாயின். புதிய பட்டினங்களில், தொழில் வாய்ப்பு, கல்வி வசதி, வியாபார சந்தர்ப்பங்கள் கூடுதலாக உள்ளபடியால் மக்கள் அவ்விடங்களை நாடிச் சென்றனர். ஆனால் அவ்வாறு வந்தவர்களின், பழக்கவழக்கங்களோ, சிந்தனைகளோ, பட்டினத்திற்கேற்றவாறு மாறுபடவில்லை தொழில் காரணமாக மக்கள் ஒன்றிணைந்தனர். இதனால் அப்பிரதேசங்களில் காணி, வீடு போன்ற அடிப்படைத் தேவைகளில் பற்றாக்குறை உண்டாயின. அரசு, அல்லது தனியார் துறை மூலமாக வழங்கப்பட்ட தொழில்களை விட வேறு பல தொழில்களும் தாமாகவே உண்டாயின. ஒன்று கூடிய மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யுமுகமாக, இவர்கள் இரண்டாம் வர்க்க உழைப்பாளிகளாக மாறினர். வியாபாரம், உற்பத்தி, போக்குவரத்து, நாட்டாமைத் தொழில் போன்ற சட்டப்படியான தொழில் மாத்திரமன்றி, விலைமகள் (தாசித்தொழில்) போதை வஸ்து விநியோகம், களவு, கப்பம் கேட்டல், பிச்சை கேட்டல் போன்ற சட்டத்திற்கு மாறான பல தொழில்களும் உண்டாயின. இச்சமயாசமயதொழில் வட்டத்துள் சிறுவர் துர்பிரயோகத்தை கூடுதலாகக் காணக்கூடியதாகவுள்ளது. குறைந்த ஊதியத்திற்கு, அல்லது இலவசமாக வேலை வாங்குவது, தங்குமிட வசதி அளித்தல், அபாயகரமான தொழிகளில் ஈடுபடுத்துவதற்கு வசதியாயிருந்தல், அல்லது பயமுறுத்தி வேலை வாங்கும் வசதிகள் கிடைப்பதனால், சிறுவர் ஊழியத்தை பெறுவதில் விசேட கவனிப்பு செலுத்துவர். ஆனால் இங்கே உள்ள சிறுவர்கள் விருப்பமின்றியே அதில் ஈடுபடுகின்றனர்.

வளர்ந்து வரும் அல்லது முன்னேற்றமடைந்த பட்டினங்களில், நிரந்தரமற்ற தொழிலில் சிறுவர் துஷ்பிரயோகம் தலை தூக்கி நிற்கிறது. அலைந்துதிரியும் பிள்ளைகளை இவர்கள் விரும்பிப் பொறுப்பேற்பர் தங்குமிடவசதியுமளிப்பர் அத்துடன் பணம் சம்பாதிக்ககூடிய முறைகளுக்குப் பயிற்சிகளை வழங்குவர். அனுமதிக்கப்படாத குடிசைகள், முடுக்குகள், வீதி ஓரங்களிலுள்ள கொட்டில்கள், அல்லது அறைகள், போன்றவையே இவ்வாறு வரும் சிறுவர்களின் இரவில் தங்கும் இடங்களாகும். பகலப் பொழுதை வீதிகளில் அல்லது வேறு இடங்களிலே கழிப்பார்கள். இவர்களை அதிர்ஷ்ட சீட்டுக்கள், பத்திரிகைகள், வளையல்கள், பழங்கள் போன்ற பொருட்களை வியாபாரஞ் செய்வது முதல் களவெடுத்தல், வளர்ந்தோருடன் பாலியல் உறவிலீடுபடல், போதைப்பொருட்கள் கடத்தல், உளவு பார்த்தல் மற்றும் பிச்சை எடுத்தல் போன்றவற்றில் ஈடுபடுத்துவார்கள்.

### சமுதாயக் கலப்புக்கள்

இலங்கைச் சமுதாயம் பட்டினத்திற்கு இடம்மாறியதன் விளைவாக தூர இடங்களிலே இருந்த, நடுத்தர மற்றும் கல்வியறிவுடையவர்கள், பட்டினங்களுக்கு வந்தனர். கிராமங்களில் போதிய அளவிலே வசதியாய் வாழ்ந்த குடும்பத்திலுள்ள பிள்ளைகள் அக்குடும்பத்தை விட்டுப் பிரிந்து இப்பிரதேசங்களிலே காணிகளை வாங்கிக் குடியேறினர். இதற்கு இன்னும் சில காரணங்களும் உண்டு அரச மற்றும் தனியார் துறை, அல்லது வங்கிகளினால் பாரிய அளவு கடன் வசதி செய்து கொடுக்கப்பட்டது. அதனைப்பெற்று, காணிகளை வாங்கி வீட்டுத்திட்டங்களை ஆரம்பித்தனர். இப்புதிய பிரதேசங்களில் குடியேறியவர்களுள் அதிகமானோர். கணவர்-மனைவி இருவரும் வேலைக்குச் செல்பவர்களாவார். அதேபோல புதிதாகக் குடியேறியவர்களுள் பெரும்பாலானோர் இளைய தலைமுறைகளே,

இதற்குக் காரணம் தமது நோக்கங்களுக்காக, தமது உழைப்பை தேவையான விதத்தில் சந்தைப்படுத்துவதற்கு உள்ள சந்தர்ப்பத்தைப் பயன்படுத்துவதாகும். இதனால் இவர்கள் ஆரம்பத்தில் வசித்த இடங்களிலுள்ள சமுதாயப் பழக்கவழக்கங்கள் இவர்களை விட்டு விலகின. ஒவ்வொருவருக்கிடையே இருந்த சமூகத் தொடர்பு ஒற்றுமை அற்றுப்போயின. புதிதாகக் குடியேறிய இடங்களில் இவர்கள் "வந்தவர்கள்" ஆவார்கள். ஆகவே அயலவர்களுடன் நம்பிக்கையான தொடர்புகளை வைத்திருக்க முடியாதிருந்தன. பணத்தைக் கொடுத்து மற்றவரின் சேவையைப் பெறுவதற்கு இதுவே காரணமாகும். இதனால் அவனுக்கு சேவகனின் உதவி தேவைப்பட்டது. வளர்ந்த வேலையாள் ஒருவனுக்கு அதிக கூலியை வழங்க வேண்டிவரும். சிலவேளை சிறு வீடுகளானபடியால் தங்குமிடப் பிரச்சினையும் ஏற்படும். ஆகவே சிறுவர்களை வேலைக் கமர்த்துவதில் கூடிய ஆர்வமெடுத்தனர் தமக்கு அறிமுகமானவர், அல்லது ஊரில் வசிக்கும் பெற்றோரினூடாக, வறிய குடும்பங்களிலுள்ள பிள்ளைகளை கொண்டு வந்தனர். அப்பிள்ளைகளைப் படிக்க வைப்பதாகவும், நன்றாகப் பாதுகாத்துக் கொள்வதாகவும், உதவிக்கு மாத்திரம் வைத்துக்கொள்வதாகவும், வங்கியில் பணத்தை வைப்புச் செய்வதாகவும், பொய்யான வாக்குறுதிகளை வழங்குவர். ஆனால் குறுகிய காலத்திற்குள் இதற்கு மாறாக வளர்ந்தவர் செய்யக்கூடிய பாரிய வேலைகளையும் செய்விக்கிறார்களென ஆய்வுகள் கூறுகின்றன. அநேகமாகப் பிள்ளைகளின் வறிய பெற்றோர் சில மாதங்களுக்கு ஒரு தடவை வந்து, சிறிய தொகைப் பணத்தையும், பழைய ஆடைகளையும் பெற்றுச் செல்வர். அன்மைக் காலத்தில் இவ்வாறான நடுத்தர வர்க்கத்தின் எஜமான்கள் சிறுவர்களை கொடூரமான முறையில் இம்சைப்படுத்தியதாக அறிக்கைகள் கூறுகின்றன.

1983ல் யுனிசெப் நிறுவனத்தினால் கொழும்பை அண்மித்த மூன்று பட்டினங்களிலே செய்யப்பட்ட ஆய்வின்படி இவ்வாறான நடுத்தர வர்க்கத்தினரின் வீடுகளுள், மூன்றில் ஒரு வீட்டில், சிறுவர்களை வேலைக்கமர்த்தியிருப்பதாக தெரிய வந்துள்ளது.

### முறைகேடான பாலியல் நடாத்தைகள்

எமது சமூக கலாச்சாரம் இருபாலாருக்கிடையே மட்டுமே பாலியல் தொடர்பை அங்கீகரித்துள்ளது. அதுவும் வாழ்க்கையிலே ஒருவருக்கு ஒருத்தி என மட்டுப்படுத்தியுள்ளது. அதுவும் சட்டபூர்வமானதாக இருத்தல் வேண்டும். அது சட்டத்தையும் விட சமூக அங்கீகாரத்துடனே பேணப்பட்டது.

**இலங்கைச் சமுதாயம் பட்டினத்திற்கு இடம்மாறியதன் விளைவாக தூர இடங்களிலே இருந்த, நடுத்தர மற்றும் கல்வியறிவுடையவர்கள், பட்டினங்களுக்கு வந்தனர். கிராமங்களில் போதிய அளவிலே வசதியாய் வாழ்ந்த குடும்பத்திலுள்ள பிள்ளைகள் அக்குடும்பத்தை விட்டுப் பிரிந்து இப்பிரதேசங்களிலே காணிகளை வாங்கிக் குடியேறினர். இதற்கு இன்னும் சில காரணங்களும் உண்டு அரச மற்றும் தனியார் துறை, அல்லது வங்கிகளினால் பாரிய அளவு கடன் வசதி செய்து கொடுக்கப்பட்டது. அதனைப்பெற்று, காணிகளை வாங்கி வீட்டுத்திட்டங்களை ஆரம்பித்தனர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் கடந்த இரு தசாப்தங்களில் இது சவாலுக்கு இலக்கா- கியுள்ளது. அதன் விளைவாக திருமணத்திற்கு முன்னரே பாலியல் தொடர்பு, வியாபாரத்திற்காகப் பாலியல் தொடர்பில் ஈடுபடல், நெருங்கிய உறவினருடன் பாலியல் தொடர்பை ஏற்படுத்திக் கொள்ளல், மற்றும் திருமணமானோர் தொடர்புகள் எனக் கூறலாம். திருமணத்திற்கு முன்னரான தொடர்புகளினால் கணிசமான அளவு பெண்கள் தாய்மையடைகின்றதாக அறிக்கைகள் கூறுகின்றன. விசேடமாக போலியான அன்பு அல்லது ஏமாற்றத்திற்கு ஆளாகி திருமணத்திறகு முன்னர் தொடர்பு கொண்ட அதிகமானோர் தாய்மையடைந்துள்ளனர். அது விலைமாதுகள் தாய்மையையடைந்த விகிதாசாரத்திலும் அதிகமானது. திருமணத்திற்கு முன்னரான தாய்மையடைதல் 100% தேவையற்ற ஒன்றாகும். இதில் 90% சட்டத்திற்கு முரணான கருக் கலைவிலே முடியும் என அறிக்கைகள் கூறுகின்றன. அவ்வாறு முடியாத விடத்து அவர்களைக் கொலை செய்து விடுவர். இல்லாவிடில் இன்னுமொருவரிடம் கையளிப்பதோ, விற்பதோ, அல்லது கைவிடுவதோ நடைபெறும். இவர்களுள் மிகக் குறைந்த எண்ணிக்கையானோர் மாத்திரம் அப்பிள்ளைகளை வளர்த்து எடுப்பார்கள்.

திருமணத்திற்கு முன்னர் பாலியல் தொடர்பை ஏற்றுக்கொள்ளாமைக்கு காரணங்கள் இருப்பது போலவே, அவ்வாறு பிறக்கும் பிள்ளைகளை ஏற்றுக் கொள்ளாமைக்கும் காரணங்கள் உள. இலங்கைச் சமுதாயத்தில் திருமணமாகாமலே கர்ப்பம் தரிப்பது அவமானத்திற்குரிய விடயம் என்று சிந்திப்பதேயாகும். அதேபோல் இதில் தொடர்புடைய ஆண்கள், பெண் கர்ப்பமடைந்துள்ளாள் எனத் தெரிந்தவுடன் அப்பெண்ணைக் கைவிடுவது சாதாரண விடயமாகியுள்ளது. எனவே தந்தைக்கு முக்கியத்துவம் அளிக்கும் சமுதாயத்தில் முறைகேடாகப் பிறந்த பிள்ளையொன்றை வளர்த்தெடுப்பது ஒரு பெண்ணுக்குக் கடினமான காரியமாகும் முன்னர் தாய்மையடைந்த பெண் மீண்டும் திருமணஞ் செய்வது கஸ்டமானதானதும், மற்றுமொரு காரணமாகும். பிள்ளையை வளர்த்தெடுப்பதற்கு பொருளாதார வசதியின்மையும் மற்றுமொரு காரணமாகும்.

### வணிகமயமாகும் சமுதாயம்

இலங்கை மக்களின் வாழ்க்கையை திடீரென மாறியமைவதற்குக் காரணமான இன்னும் சில விடயங்கள், பல்வேறு வகையில் சிறுவர் துஷ்பிரயோகப் பிரச்சினையில் ஆதிக்கத்தைச் செலுத்தியுள்ளது. மக்கள் ஓரளவிற்கு மேலைத்தேய நாடுகளைப் பின்பற்றுவதும் மற்றும் வியாபார நோக்கங்கள் முதன்மை நிலைபெற்றதும் ஒரு காரணியாகும் விசேடமாக பணத்தின் மதிப்பு அதிகரித்துள்ளது. எனவே மக்கள் விரைவாகப் பணத்தைச் சம்பாதிக்க முற்பட்டமையைக் காணக் கூடியதாயுள்ளது. இந்நோக்கத்தினாலேயே, நியாயமான முறையில் மாத்திரமல்லாது, நியாயமற்ற முறையிலும், நற்பண்பாடுகளையும் மீறி, பணத்தைச் சம்பாதிக்கக் கூடிய முயற்சிகள் அதிகரித்தன. இலங்கை விவசாயசமுதாய முறைகளுக்குப் பண்பட்டு, எளிமையான வாழ்க்கை நடாத்திய அதிகமானோர், குறுகிய காலத்தினுள், நவீன முறைகளுக்கும், மேலைத்தேய முறைகள் அல்லது, நகர வாழ்க்கை முறைகளுக்கு மாறும்போது, நிச்சயமாக அவர்களது வாழ்க்கை வட்டத்திலும் சிக்கல்கள் ஏற்படும். அவர்களது அன்றாட பாவனைக்கான தேவைகள் அதிகரிக்கும். அதனைப் பெற்றுக் கொள்ள மென்மேலும் பணம் தேவைப்படும். இதனால் குடும்பத்தில் யாவரும் பணத்தை எவ்விதத்திலேனும் சம்பாதிப்பது அவசியமாகும். பிள்ளைப் பராயத்திலுள்ளவர்களையும், ஊழியர் குழுவிலே சேர்ப்பதற்கு அதுவும் ஒரு காரணமாகும். 1981ன் கணக்கெடுப்பின்படி 10-14 வயதிற்குட்பட்ட 20,313 பெண் பிள்ளைகளும், 48,400 ஆண் பிள்ளைகளும், இவ்வூழியர் குழுவிலே இருந்தனர். இது மொத்தப் பிள்ளைகளின் எண்ணிக்கையின் 8% ஆகும்.

இவ்வணிக சமுதாயத்துள்ளே வளர்ந்து வரும், போதைவஸ்து வியாபாரமும், உல்லாசத் பயண தொழிலும், சிறுவர்களைத் துஷ்பிரயோகஞ் செய்யக் கூடிய அளவைக் கூட்டியுள்ளது. 1990ல் இலங்கை 6-14 வயதிற்குட்பட்ட 30,000 விலைமாதர்கள் இருந்ததாக, அங்கீகரிக்கப்படாத அறிக்கைகள் கூறுகின்றன. சமுதாயத்தினுள் நல்லொழுக்கம் அழிக்கப்பட்டதை இது காட்டுகிறது. அதுவே மேலும் பாதிப்பை ஏற்படுத்துவதற்கும் காரணமுண்டு.

கடந்த நூற்றாண்டிற்குள் இந்நாட்டு மக்களின் வாழ்க்கையில் ஏற்பட்ட மாற்றங்களும், சிறுவர் துஷ்பிரயோகங்களும் சமூகப் பிரச்சினையாக வளர்ச்சியடைவதற்குக் காரணமாகவுள்ளதென்பதை ஏற்றுக்கொள்ளல் வேண்டும் அதற்கான தீர்வைக் காண, நூறு ஆண்டுகளுக்கு பின்செல்ல வேண்டியதில்லை. தற்போதைய சமுதாயத்தினுள்ளே பிரச்சினையிலிருந்து மீட்சிபெறுவதற் காக, விதிமுறைகளை இனங்கண்டு அதனை முன்னெடுத்துச் செல்ல வேண்டும்.

கடந்த நூற்றாண்டிற்குள் இந்நாட்டு மக்களின் வாழ்க்கையில் ஏற்பட்ட மாற்றங்களும், சிறுவர் துஷ்பிரயோகங்களும் சமூகப் பிரச்சினையாக வளர்ச்சியடைவதற்குக் காரணமாகவுள்ளதென்பதை ஏற்றுக்கொள்ளல் வேண்டும் அதற்கான தீர்வைக் காண, நூறு ஆண்டுகளுக்கு பின்செல்ல வேண்டியதில்லை. தற்போதைய சமுதாயத்தினுள்ளே பிரச்சினையிலிருந்து மீட்சிபெறுவதற்காக, விதிமுறைகளை இனங்கண்டு அதனை முன்னெடுத்துச் செல்ல வேண்டும்.

எந்தவொரு மனித சமுதாயமும் தொடர்சசியாக மாறுபடாதிருக்க முடியாது.

பொருளாதாரம், கல்வி, பிரயாணம், பூகோளம் மற்றும் சனத்தொகை போன்ற பல்வேறு துறைகளில், அவ்வப்போது ஏற்படும் மாற்றங்களுக்கு, இணையாக நாட்டு மக்களின் வாழ்க்கையும் மாற்றமடைய வேண்டும். ஆனால், அது சமுதாயத்தை, வீழ்ச்சிக்கு எடுத்துச் செல்லும் மாற்றமாக அமையலாகாது.

சமுதாய நம்பிக்கைகள், தடைகள் சமுதாய வளங்கள், நல்லொழுக்கங்கள் போன்றன சமுதாய அங்கத்தவரிடையே நெருக்கமாக இருப்பதற்கான காரணம்; சட்டப்படி இல்லா விட்டாலும், நிராகரிக்க முடியாத ஓர் அமைப்பினால் கட்டுண்டதேயாகும். இக்கட்டமைப்பு, குடும்பம், திருமணம், உறவினர் போன்ற அமைப்புகளால் பிணைக்கப்பட்டுள்ளது. ஆகவே வீழ்ச்சியடைந்துவரும் இச்சமூக அமைப்புகளை மீண்டும் வலுப்படுத்துவதனால், சிறுவர் துஷ்பிரயோகம் மாத்திரமன்றி, சமூகத்தில் ஏற்படக்கூடிய இன்னும் பல பிரச்சினைத் தடுக்க முடியும் உலகிலே சிறுவர் துஷ்பிரயோகம் இடம் பெறாத நாடுகளேயில்லை. அதே போல, அதனை முற்றாகக் தடுக்கவுமுடியாது. ஆனால் நிச்சயமாக அதனளவைக் குறைக்க முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர் துன்புறுத்தலைத் தடுப்பதற்கான முறையான வேலைத்திட்டம் ஒன்றுவேண்டும்

காமினி ஹேமசந்திர
திட்டமிடல் அதிகாரி தேசிய கல்வி நிறுவகம் மகரகம



**புதிய கல்விச் சீர்திருத்தத்தில் பாடசாலைகளுக்கான வழிகாட்டல் சேவையை ஆரம்பிப்பதன் முக்கியத்துவத்தைக் கவனத்திற் கொண்டிருத்தல் மிக முக்கியம். நன்றாகப் பயிற்றப்பட்ட, பாடசாலை வழிகாட்டல்களுக்கான ஆலோசகர் ஒருவர் இருப்பின், சகல பாடசாலைகளிலும், பல வகையிலே துன்புறுத்தப்பட்ட மாணவர்களை இனங்கண்டு, அதற்கேற்ற பரிகாரங்களை செயற்படுத்துவதற்கு இலகுவாக இருக்கும். ஏதேனும் பாதிப்புக்குள்ளாகி, சிக்கல்களை எதிர்நோக்கும் மாணவர்களை சமுதாயத்திற்கு வெளிக்காட்ட வைப்பது அவ்வளவு சிறந்ததல்ல. ஆலோசகர் மட்டத்திலே தீர்க்கமுடியுமாக இருப்பின், அவ்வாறு செய்வது உசிதமாகும்.**

ஆதிகாலம் முதல் பிள்ளைகளை கொலை செய்து, அடிமைப் படுத்தப்பட்டு துஷ்பிரயோகஞ் செய்யப்பட்ட நிகழ்வுகளை உலகிலே பல பாகங்களிலிருந்தும் கேட்கக் கூடியதாக இருந்தது. ஆனால் இலங்கையிலே அது மிகக் குறைந்த அளவிலேயே காணக்கூடியதாயிருந்தது. ஆனால் கடந்த சில தசாப்தங்களுள், இலங்கையில், சிறுவர் துன்புறுத்தல் எல்லையுக்கு அதிகரித்துள்ளன. என்பதைச் சிந்திக்கும் போது, அரசாங்கம், அதிலே நேரடியாகவே தலையிட வேண்டி ஏற்பட்டது. 1998 ஜுலை 11ம் திகதி காலை வானொலிச் செய்தியின்படி 5000 நக்கும் அதிகமான இலங்கைச் சிறுவர்கள் வெளிநாட்டவரால் துஷ்பிரயோகஞ் செய்யப்பட்டுள்ளனர். இவர்களுள் அநேகமானோர் தமது பெற்றோர்கள் மூலமே இந்நிலைக்குத் தள்ளப்பட்டமை வருந்தத்தக்க விடயமாகும். ஒரு பிள்ளையின் சிறு பராயப் பருவமானது சிறந்த பிரஜைக்கான அனுபவங்களை அதிகமாகப் பெறவேண்டிய பருவமாகும். இக் காலத்திலே பெற்றுக்கொள்ளும் கசப்பான அனுபவங்கள் அவர்களது எதிர்காலத்தை மிகவும் பாதிப்படையச் செய்யும் என்பதை சில பெற்றோர்கள் சிந்திக்கிறார்களில்லை. முன்பொருநாள் பொல்பிதிகம எனும் இடத்தில் 8 வயதுநிரம்பிய சிறுமி ஒருத்தி பாலியல் வல்லுறவுக்குட்படுத்தப்பட்டுக் கொலை செய்யப்பட்டுள்ளார்.

இது பற்றி ஊர் மக்களும் ஆவேசங் கொண்டிருந்தனர். அதே போல, சில வருடங்களுக்கு முன்பு மொறட்டுவ பிரதேசத்திலே 3 வயதுச் சிறுமியொருத்தி அயல் வீட்டுக்குச் சென்று தொலைக்காட்சி பார்த்துவிட்டு வீடு திரும்புகையிலே கற்பழிக்கப்பட்டு கொலை செய்து கூரைமீது வீசியெறியப்பட்டாள். அதே போல மாடு மேய்க்கும் ஒரு சிறுவன், சிறு பிள்ளையொன்றைக் கற்பழித்து, கழுத்தை நெரித்துக் கொலை செய்திருந்தான். இன்னுமொரு இடத்திலே தந்தை 1 1/2 வயதுப் பாலகனை தென்னை மரத்திலே அடித்துக்கொன்றான் இதனையும் விட சமூகத்திலே மேல்மட்டத்திலே உள்ள வீடுகளில், வீட்டு வேலைகளுக்காக அமர்த்தப்பட்ட சிறுவர், சிறுமியரை, அடித்து, துன்புறுத்தி, தீயினால் சுட்டு, காயமேற்படுத்திய பல சம்பவங்கள் பத்திரிகைகள் மூலமாக வெளிவந்துள்ளன. எல்லைப்புற கிராமங்களில், பயங்கரவாதத்தினால் பாதிப்புற்ற சிறுவர்களைப் பாதுகாப்பதென உலகத்திற்கு காண்பிக்கும். அரச சார்புற்ற நிறுவனமொன்றின் மதகுரு ஒருவர் அக்குழந்தைகளைப் பலாத்காரமாகப் பாலியல் துஷ்பிரயோகத்திற்கு ஈடுபடுத்திய சம்பவங்களையும் அறிந்து கொள்ளக்கூடியதாக இருந்தது.

> இவ்வாறு பாதிக்கப்பட்ட சந்தர்ப்பங்கள், கேள்விப்பட்டதையும் விட பல்வேறு காரணங்களால் மறைக்கப்பட்ட சந்தர்ப்பங்களும் உண்டு. அதே போல, பாதிப்புக்குள்ளாகி தமது வேதனைகளைப் பொறுமையுடன் தாங்கிக் கொண்டு வாழ்க்கையிலே திருப்தியை நிம்மதியை இழந்தோர் தொகை ஏராளமாக இருக்கலாம். மனித உரிமைகளைப் பற்றி, அதிகமாகப் பேசப்படும் இக்காலகட்டத்தில் பாதிக்கப்படும் சிறுவர்களை, அதிலிருந்து பாதுகாப்பது

இவ்வாறு பாதிக்கப்பட்ட சந்தர்ப்பங்கள், கேள்விப்பட்டதையும் விட பல்வேறு காரணங்களால் மறைக்கப்பட்ட சந்தர்ப்பங்களும் உண்டு. அதே போல, பாதிப்புக்குள்ளாகி தமது வேதனைகளைப் பொறுமையுடன் தாங்கிக் கொண்டு வாழ்க்கையிலே திருப்தியை நிம்மதியை இழந்தோர் தொகை ஏராளமாக இருக்கலாம். மனித உரிமைகளைப் பற்றி, அதிகமாகப் பேசப்படும் இக்காலகட்டத்தில் பாதிக்கப்படும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுவர்-களை, அதிலிருந்து பாதுகாப்பது, அரசாங்கத்தைப் போல சகலரினதும் கடமையாக இருத்தல் வேண்டும். இதற்கமைய, எவ்வித பேதங்களுமின்றி, சகல கட்சிகளினதும், சம்மதத்துடன் பாராளுமன்றத்திலே நிறைவேற்றப்பட்ட சிறுவர் துஷ்பிரயோகத்தை ஒழிக்கக் கூடிய சட்டங்கள் நிறைவேற்றப்பட்டது. அதற்காகப் பல்வேறு நிறுவனங்களும் உருவாக்கப்பட்டன. அவ்வாறான கால கட்டத்திலே பெற்றார், ஆசிரியர் மதகுருமார் பல்வேறு தொண்டர் நிறுவனங்கள், மற்றும் பொறுப்பு வாய்ந்த யாவரும், இவ்வாறான சிறுவர் துன்புறுத்தலை ஒழித்துக் கட்டுவதற்கு உண்மையாகவே முயற்சி செய்ய வேண்டியது முக்கிய கடமையாகும்.

### துஷ்பிரயோகச் செயல்களை வகைப்படுத்தல்

உளவியலுக்கமைய சிறுவர் துஷ்பிரயோகம் என்பதன் பொருள் யாது? இது முக்கிய நான்கு துறை களிலேவகைப்படுத்த முடியும்.

- ✧ உடலில் காயங்களை ஏற்படுத்துதல்/ வேதனைக்கு உள்ளாக்குதல்
- ✧ கைவிடுதல்/கவனியாதிருத்தல்
- ✧ பாலியல் துஷ்பிரயோகம்
- ✧ உளரீதியில் இம்சைப்படுத்தல்

### உடலில் பாதிப்புகளை உண்டுபண்ணல்

ஒரு பிள்ளை உடல்ரீதியாக பாதிக்கப்படல், அடித்தல், சுடுதல், எரிகாயங்களை ஏற்படுத்துதல் போன்றவை, இதிலே அடங்கும். இவ்வாறு பாதிப்பிற்குள்ளான பிள்ளைகள், தற்கொலை, பண்ணுவது அல்லது இறந்துவிடுவது முண்டு.

கைவிடுதல்:- பிள்ளையின் வளர்ச்சிக்குத் தேவையான அடிப்படைத் தேவைகளை வழங்காததிலிருந்து, அவனைப் பற்றிக் கவனியாது, கைவிடுவதுவரை வியாபித்துள்ளது. எந்த ஒரு சமுதாயத்திலும், இவ்வாறானவர்களை கூடுதலாகக் காணக்கூடியதாகவுள்ளன. பாடசாலை நடவடிக்கையின்போது இவ்வாறு பாதிப்புற்றோரை இனங்காணமுடியும். உணவுக்காக அதிகமாக அவாவுறுதல், பிறரின் உணவுகளைக் களவாடுதல், சிக்குண்ட தலைமயிர், வரட்சியாகக் காட்சியளித்தல், பாடசாலைக் கடமைகளின்போது, உரியவாறு நடந்து கொள்ளாமை, பயந்த சுபாவத்துடன் இருத்தல், வளர்ந்தோருடனான தொடர்பாடல் குறைவு, வயதிற்கேற்ற

பருவமடையாத வயதையுடைய பிள்ளைகளை பலாத்தாரமாக அல்லது ஏமாற்றி பாலியலில் ஈடுபடுத்துவது பாலியல் துஷ்பிரயோகம் எனப்படும். அனேகமாக இவ்வாறான பிள்ளைகள் தமது அவல நிலையைக் கூறமுடியாத நிலையிலே இருக்கின்றனர். இவ்வாறான பிள்ளைகள், சமூகத்திற்கோ அல்லது குடும்பத்திற்கோ மகிழ்ச்சியோடு முகங்கொடுக்க மாட்டார்கள்.

வளர்ச்சியின்மை, போன்ற அறிகுறிகளைக் காணக்கூடியதாக இருக்கும்.

### பாயியல் துஷ்பிரயோகம்

பருவமடையாத வயதையுடைய பெற்றார் பராமரிப்பிலே உள்ள பிள்ளைகளை இளைஞர்கள் மூலமாக, பலாத்தாரமாக அல்லது ஏமாற்றி பாலியல் ஈடுபடுத்துவது பாலியல் துஷ்பிரயோகம் எனப்படும். அனேகமாக இவ்வாறான பிள்ளைகள் தமது அவல நிலையைக் கூறமுடியாத நிலையிலே இருக்கின்றனர். இவ்வாறான பிள்ளைகள், சமூகத்திற்கோ அல்லது குடும்பத்திற்கோ மகிழ்ச்சியோடு முகங்கொடுக்க மாட்டார்கள், தேவையற்ற முறையிலே பிள்ளைகளைத் தடவுதல், பாலியல் நோக்கங்களுக்காகப் படம்பிடித்தல், அதனை வெளிப்படுத்துதல், பாலியலில் ஈடுபடுத்துதல் போன்றன பாலியல் துஷ்பிரயோகம் எனப்படுகிறது.

### உளரீதியில் இம்சைப்படுத்துதல்

இவ்வாறான பிள்ளைகளை இனங்காணுவது கடினமாகும். பெற்றோர், அல்லது நெருங்கிய எந்தவொரு வளர்ந்தோரிடமும் இந்நிலை ஏற்படலாம். அவ்வாறானவர்கள் உளவியல் மற்றும் பழக்க வழக்கங்களின் முன்னேற்றத்திற்கும் இது பெரிய சவாலாக அமையும். மேற்கூறப்பட்ட எந்தவொரு பாதிப்பின் மூலமாகவும் இந்நிலை ஏற்படலாம். சிலவேளை மேற்குறித்த பல பாதிப்புகளும் ஒரே நேரத்தில் ஏற்படுவதன் காரணமாக, பாலியல் துஷ்பிரயோகம், உடல்ரீதியான பாதிப்பு போன்றன ஏற்படுவதன் காரணமாக உள பாதிப்பு ஏற்படலாம்.

### மேற்கூறப்பட்ட நான்கு காரணிகளையும் விட இன்னும் பல காரணங்களாலும் பாதிப்பு ஏற்படலாம்

- ✧ சீரழிந்த குடும்ப வட்டம்
- ✧ சமுதாயத்தில் தனிமையாதல்
- ✧ பெற்றோர் வளர்ந்தோர் அடிக்கடி பயமுறுத்துதல்
- ✧ சிறுபராயத்தைக் கழிப்பதிலே தடை ஏற்படுதல்
- ✧ குடும்ப பொருளாதார கஷ்டங்கள் * குடும்ப அங்கத்தவர்களது எண்ணிக்கை அதிகரிப்பு * எளிமையான வாழ்க்கை முறைகள்
- ✧ பெற்றோர்கள் மதுபோதைக்கு வசப்படுதல்
- ✧ பெற்றோர் மனநோயுள்ளோராயி ருத்தல்
- ✧ பெற்றோர் அடிக்கடி நோய்வாய்ப் படுதல் * தாய் அல்லது தந்தை வளர்ப்புப் பெற்றோராயிருத்தல் போன்ற காரணங்களாகும்.

இவ்வாறான சிறுவா துஷ்பிரயோகங் களை விரிவாக ஆராயும் போது இலங்கையிலே பலர் இருக்கின்றனர் எனச் சிந்திக்க முடியும். இவ்வாறானவர்கள், வளர்ந்ததன் பின்னரும், சமுதாயத்திலே உரிய ஆளுமையுடன் இருப்பார்களா என்பது கேள்விக்குறியே. அவ்வாறானவர் கள் கல்வியை முடித்தபின் உயர்ந்த பதவிகளிலிருந்தாலும், அவர்களில் இப்பாதிப்புகளை இடையிடையே காணக்கூடியதாகவிருக்கும். அமெரிக்கா போன்ற நாடுகளில் இவ்வாறான ஆராய்ச்சி நடாத்தியபோதும், இலங்கையிலே இதற்கான ஆய்வுகள் மிகக் குறைவு.

சிறுவர் துஷ்பிரயோகங்களை ஒழித்துக் கட்டுமுகமாக இலங்கைப் பாராளுமன்றத்திலே நிறைவேற்றப் பட்டுள்ள, தேசிய சிறுவர் பாதுகாப்பு மசோதா முக்கிய இடத்தை வகிக்கிறது. அவ்வாறே சிறுவர்களது வாழ்வைப் பாதுகாப்பதற்காக விசேட திணைக்களங் களை அமைத்தும், பொலிஸ் இலாகாவில் பிரத்தியேக பிரிவுகளை ஆரம்பித்தலும், முக்கிய நடவடிக்கையாகக் இனம் காணப்படுகிறது. அரச தலைமையிலே இதனை ஆரம்பித்து, கடும் சட்டதிட்டங்கள் இருந்த போதிலும் நாட்டு பிரஜைகளின் ஒத்துழைப்பு இல்லாவிடில் இதனை ஒழிப்பது மிகவும் கடினமாகும். இதற்காக நாட்டு மக்களின் சமூக ஒத்துழைப்பும் மிக அத்தியாவசியம் சமயத் தலைவர்கள் பெற்றோ,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியர்கள், சமுக சேவையாளர்கள் பாதுகாப்பு உத்தியோகத்தர் போன்றோர் இந்தக் கவலைக்குரிய செயலை ஒழித்துக் கட்ட செயற்படவேண்டியது அவர்கள் யாபேரினதும் முக்கிய கடமையாகும்.

உண்மையாகவே செயலாற்ற வேண்டும் என்பதற்கான காரணமுமுண்டு. சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி, சுயநலங்கருதி, மாறுவேடம்பூண்டு பிரவேசிக்கும் சிலர் இவ்வாறான முயற்சிகளை மேலும், சிக்கல்களுக்குள்ளாக்கலாம். உதாரணமாக வெளிநாட்டு உதவிகளைப்பெறும். அரச சார்பற்ற தொண்டர் நிறுவனங்களைக் கூறலாம். அவ்வாறான ஏமாற்றும் போர்வழிகள், பிள்ளைகளைப் பிறருக்கு வியாபாரஞ் செய்து இலாபத்தைப் பெறவும், பின்வாங்கமாட்டார்கள். எனவே பிள்ளைகளின் நலனை விரும்புகின்ற யாபேரும், இவ்வாறான நிலைமைகளை ஒழித்துக்கட்டுவதற்கு அரசுடன் இணைந்து செயற்படுவது முக்கிய பொறுப்பாகும். விசேடமாக ஆசிரியர்களும், கல்வியுடன் தொடர்புடைய யாவருக்கும் இதிலே கடப்பாடு உண்டு. இவ்வாறு பாதிப்புற்றவர்களை இனங்கண்டு, அவர்களுக்கு ஏற்ற நடவடிக்கைகளை எடுப்பது மிக முக்கியமாகும்.

புதிய கல்விச் சீர்திருத்தங்களுக்கமைய பாடசாலைகளில் ஆலோசனைச் சேவையை ஆரம்பிப்பது தொடர்பாகச் கவனமெடுத்திருப்பது முக்கிய விடயமாகும். நன்றாகப் பயிற்றப்பட்ட ஆலோசகர் ஒருவர் சகல பாடசாலைகளிலுமிருப்பின், பாதிப்புற்ற மாணவர்களை இனங்கண்டு ஏற்ற பரிகாரங்களைச் செய்வதற்கு இலகுவானதாக இருக்கும். பல பாதிப்புகளுக்கும் பிரச்சினைகளுக்கும் ஆளான பிள்ளைகளை சமுதாயத்தில் வெளிப்படையாக்குவது அவ்வளவு நல்ல காரியமன்று. ஆலோசகர் மட்டத்திலேயே பிரச்சினைகளுக்குத் திர்வுகாண்பது உசிதமானதாகும். ஆனால் நிலைமை பாரிய சிக்கல் வாய்ந்ததாக இருப்பின் தனது எல்லையைத் தாண்டி, சட்டத்தின் மூலமாகலாவது அப்பிள்ளையை அதனினின்றும் மீட்டுக் கொள்ள வேண்டியது அவசியமாகும். ஆலோசகர் பிள்ளையைப்பற்றி எடுக்கும் நடவடிக்கைகளின் போது, ஆசிரிய குழாமிலுள்ள யாவரும் அவருக்குப் போதிய ஒத்துழைப்புகளை வழங்கவேண்டியது அவர்களது பாரிய கடமையாகும்.

பாதிப்புற்ற பிள்ளைதொடர்பாக ஏதேனும் சந்தேகங்கள் ஏற்பட்டால் அதனைப் பற்றி ஆலோசகருக்குத் தெரியப்படுத்தி, விபரங்களைச்

***பாதிப்புற்ற மாணவரொருவர் பாடசாலை விட்டு வீடு செல்வதற்கு விருப்பங்காட்டமாட்டார். அடிக்கடி பாடசாலைக்கு வருகை தராதிருப்பார். வயதிற்கு அப்பாற்பட்ட முறையிலே பாலியல் விபரங்களில் கவனங்காட்டுவார் வகுப்பறை அல்லது பாடசாலைக் கடமைகளிலே கவனத்தைச் செலுத்தமாட்டார் உணவு சம்பந்தமாகப் பிரச்சினை கொடுப்பார்***

சேகரிப்பதற்கான ஏற்ற நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். ஒரு பிள்ளையைப் பற்றிய கூடுதலான மேற்பார்வை செய்யக்கூடிய சந்தர்ப்பங்கள் கிடைப்பது ஆசிரியர்களுக்கே. அதனைப் பற்றிய பூரண அனுபவமுள்ளவர்களும் அவர்களே. இலங்கையிலே இன்னும் பல ஆசிரியர்கள், பிள்ளைகளிடம் அன்புடனும் இணைந்தும் பழகுகின்றனர். ஏனைய சாதாரண மாணவர்களையும் விட, பாதிப்புற்ற மாணவர்களிடம் மேலதிக அன்பையும் கவனிப்பையும் செலுத்தவேண்டியது ஆசிரியரின் கடமையாகும்.

### பழக்க வழக்கங்கள்

பாதிப்புற்ற மாணவர்களை இனங்காட்டக்கூடிய அறிகுறிகள் யாவை? விசேடமாக ஆரம்பப் பாடசாலைச் சிறார்களுக்குத் தமது பிரச்சினைகளை வெளிப்படுத்தவோ, அதனைப் புரிந்து கொள்ளவோ சக்தியில்லை. அப்படியானவர்களை, பிறிதொரு கருணை உள்ளம்படைத்த ஒருவரன்றி ஏனையோர் புரிந்து கொள்வது கஷ்டமாகும். தமது வகுப்பறையில் கற்கின்ற சகல மாணாக்கர் மீது அவதானமாக இருக்கும் ஓர் ஆசிரியருக்கு அவ்வாறான மாணவர்களிலே ஒன்று அல்லது பல பிரச்சனைகளை இனங்கான சந்தர்ப்பம் கிடைக்கும்.

- ✧ உடற்பயிற்சி அல்லது விளையாட்டின் போது தமது உடைகளை மாற்ற விரும்பமாட்டார்.
- ✧ வேறொருவர் தன்னைத் தொடுவதை விரும்பமாட்டார்
- ✧ அநேகமான நேரங்களிலே ஒரே நிலைத்த ஒரு பார்வையுடன் பயந்த தோற்றத்துடன் காணப்படுவார்.
- ✧ பாடசாலை விட்டு வீடு செல்வதற்கு விருப்பங்காட்ட மாட்டார். அடிக்கடி பாடசாலைக்கு வருகை தராதிருப்பார். வயதிற்கு மேற்பட்ட முறையிலே பாலியல் விபரங்களில் கவனங்காட்டுவார்
- ✧ வகுப்பறை அல்லது பாடசாலைக் கடமைகளிலே கவனத்தைச் செலுத்தமாட்டார்
- ✧ உணவு சம்பந்தமாகப் பிரச்சினை கொடுப்பார்
- ✧ தனது பழக்கவழக்கங்களை உடனுக்குடன் மாற்றுவார்
- ✧ காரணமின்றி அழுவார்.

**இவை தவிர விசேடமாகப் பருவமடைந்த பிள்ளைகளிடையே பின்வரும் அறிகுறிகளைக் காணலாம்.**

- ✧ பாதிப்படைந்த நிலைமை
- ✧ அநேகமாக மறைந்திருக்கும் தன்மை
- ✧ தற்கொலை புரியும் எண்ணம்
- ✧ ஆத்ம நம்பிக்கையை குறைவாவக் கொண்டிருத்தல்.
- ✧ அதிகமாக மதுபானம், புகைத்தல் பழக்கங்களை உடையவராயிருத்தல்.
- ✧ தாமாகவே தமது உடலில் காயங்களை ஏற்படுத்திக் கொள்ளல்.

இவ்வறிகுறிகள் யாவும் நூற்றுக்கு நூறு வீதத்திலே சரியாக இருக்கமாட்டாது. ஆனால், பாதிப்புற்ற மாணவர்களைப்பற்றி கவனத்தைச் செலுத்தும் ஆசிரியர்களுக்கு இவை பயனுள்ளதாக இருக்கும். எவ்வாறாயினும் பாதிக்கப்பட்டிருக்கலாம் என சந்தேகமான பிள்ளைகளிருப்பின், அவர்களை ஆலோசகர்களிடம் சமர்ப்பிப்பது சிறந்தது. அவ்வாறு ஆலோசகர் ஒருவர் இல்லாவிட்டால், உரிய அதிகாரிகளிடம் கலந்தாலோசித்து, உரிய இடத்திற்கு அம்மாணவரை அனுப்பி வைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். பிள்ளையின் நம்பிக்கையைப் பெற்ற ஓர் ஆலோசகருக்கு, பிள்ளையைப் பற்றிய விபரங்களைத் தெரிந்து கொள்வது சுலபமாக இருக்கும். ஆனால் சாதாரண ஓா ஆசிரியருக்கு இவ்வாறான பிள்ளைகைளைப் பற்றி, பிரச்சினைகளை சமர்ப்பிப்பது குறைவு, அவ்வாறான பிரச்சினைக்குரிய பிள்ளைகளைப்பற்றி ஆராயும்போது, அவ்வாறான பிள்ளையின் கௌரவத்தையும், பாதுகாப்பையும் உரியவாறு உறுதிப்படுத்தக் கூடியவகையில் செயற்படுத்துவதற்குச் சகலரும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை

பேராசிரியர் **ஹரேந்திரா டி சில்வா**
தலைவர் ஜனாதிபதி செயலணிக்குழு – சிறுவர் பாதுகாப்பு

செவ்விகண்டு தயாரித்தவர்
**சமனொல பியுதுரு விஜயரத்ன**

### சிறுவர் பாதுகாப்பு மசோதா

1998ல் இல. 50ஐக் கொண்ட தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை மசோதா எனும் பெயரில் தயாரிக்கப்பட்டு, அம்மசோதாவை பாராளுமன்றம் அங்கீகரித்த பின் 1999 சனவரி முதல் செயற்படுத்தப்படும். அதற்கமைய இது பிள்ளைகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காக அர்ப்பணிக்கப்பட்ட இறந்ததோர் அரச நிறுவனமாகும்.

### சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை

சிரேஷ்ட உளவியல் நிபுணர்கள், சிறுவர் வைத்திய நிபுணர், உளவியலாளர்கள், சட்ட வைத்தியர்கள் சட்டத்தரணிகள், பிரதி பொலிஸ் மா அதிபர்கள், போன்ற விசேட நிபுணத்துவம் பெற்றவர்களும், மற்றும் சட்டம், சிறுவர் நலநோக்கு, கல்வி, அல்லது அவ்வாறான துறைகளில் பரந்த அனுபவமுள்ளவர்கள், இச்சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையில் அங்கத்துவம் பெறுவர் அவ்வங்கத்தவர்களை நியமனஞ் செய்வது உரிய துறை தொடர்பான அமைச்சரின் அங்கீகாரத்திற்கமைய சனாபதி அவர்களினாலே. இதற்கும் மேலதிகமாக சிறுவர் பராமரிப்பு மற்றும் சிறுவர் உரிமைகள் பற்றிய சமவாயத்திற்கமைய, நியமனஞ் செய்யப்படுகின்ற தலைவர் ஆகியோரின் அங்கத்துவ சேவைக்கலாம் 3 வருடங்களாகும். அதிகாரசபையின் பணிகளுக்கான உத்தியோகத்தர் குழுவும் இவ்வதிகாரசபையினாலேயே நியமனஞ் செய்யப்படும்.

சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பான முறைப்பாடுகளின்போது, மகப்பேற்று நிலையங்கள், வைத்திய சாலைகள், வீடுகள் மற்றும் கட்டிடங்கள் போன்ற எந்தவொரு இடத்திற்கும் சென்று அதனைப் பரிசீலிப்பதற்கான அதிகாரம் சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் அதிகாரம் பெற்ற அதிகாரிகளுக்கே உரித்தானதாகும். பிள்ளைகள் தொடர்பான பல்வேறு சட்டவிரோத செயல்கள் சட்டத்திற்கு மாறான விதத்தில், பிள்ளைகளைத் தத்தெடுப்பது போன்றன பற்றி, அவர்களினால் விசாரணை செய்யப்படும். அத்துடன், அவ்விடத்திற்குரிய தஸ்தா வேஜுகள், அல்லது அறிக்கைகளைப் பரிசீலித்து, அதன் அச்சுப்பிரதி அல்லது புகைப்படப் பிரதிகளைப் பெற்றுக் கொள்ளும் உரிமையும் உண்டு அதன்படி எந்த ஒரு நபரிடமும் விசாரணை செய்யும் உரிமை இவர்களுக்கு உண்டு. சிலவேளை சிறுவர் தொடர்பாக ஏதேனும், சட்டத்திற்கு முரணான சம்பவம் நடைபெற்றுள்ளதெனக் கருதினால் அதற்குரிய சாட்சிகள் உள்ளதெனக் கருதும் ஆதாரங்களைத் தடை செய்து கைப்பற்றுவதற்கும் அங்கீகாரம் பெற்ற அதிகாரிகளுக்கு அதிகாரமுண்டு. அவ்வாறான சந்தர்ப்பங்களில் அதிகாரிகளின் பணிகளுக்குத் தடையை ஏற்படுத்தும் எந்தவொரு நபரும் சட்டப்படி தண்டனைக்கு ஆளாக்கப்படுவர். இவ்வதிகாரிகள் ''சமாதான உத்தியோகத்தர்'' என அழைக்கப்படுவர்.

### பிள்ளை என்றழைக்கப்படுவது யாரை?

சிறுவர் பாதுகாப்பு மசோதாவுக்கு அமைய 18 வயதிற்குட்பட்டவர்களே பிள்ளையாவார். தண்டனை சட்டக் கோவையின் சில ஒழுங்குவிதிகள் (286அ 288, 364அ, 365அ, அல்லது 365ஆ) ஆகியவற்றுள் எவற்றையேனும், பெண்கள் இளைஞர்கள், பிள்ளைகளைச் சேவையிலீடுபடுத்தும் மசோதாவில் எந்தவொரு ஒழுங்கு விதிகள் அல்லது, சிறுவர்கள் மற்றும் இளைஞர்கள் தொடர்பான சட்ட மசோதாவில் எந்தவொழுங்கில், அல்லது, கல்வி சட்ட மசோதாவின் கீழ் அமைக்கப்பட்ட கட்டாயக் கல்விக்குரிய, கட்டளைகளில் எந்தவொரு ஒழுங்கு விதியையும், மீறுபவர்களையும் ஏதேனும் செயலொன்றைச் செய்யாது விடுவதும் குறிக்கப்படும் அவ்வாறே பிள்ளைகளுக்கு உயிராபத்தை விளைவிக்கக்கூடிய அல்லது, உடல்ரீதியான பாதிப்பு, உளரீதியான சிந்தனைகுரியதான பாதிப்பை உண்டுபண்ணி, சிறுவர்களை ஆயுதமேந்திய போராட்டத்திற்குத் தொடர்பு படுத்துவதும், சிறுவர்களை துன்புறுத்தல்களுக்கு உள்ளாக்கும் விடயங்களாகும்.

சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் அமைப்பு அதிகாரங்கள் போன்ற, யாவும் சிறுவர் சமுதாயத்தைப் பாதுகாக்கும் உயரிய நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்ளும் முகமாகவே அமைந்துள்ளது. சிறுவர் பாதுகாப்பு அதிகார சபைக்குரிய அதிகாரங்கள் யாவை என்பதை அம் மசோதாவிலே தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது. அதிகாரசபைக்குரிய பொறுப்புகளைக் குறிப்பிடுவது உசிதமாகும். அவை பின்வருமாறு:

### அதிகாரசபையின் கடமைப்பாடுகள்

- சிறுவர் துஷ்பிரயோகத்தைத் தடுத்தல், அவ்வாறு பாதிப்புற்றோர்களுக்குப் புனர்வாழ்வளிதல் பற்றிய தேசியக் கொள்கைக்கு அரசாங்கத்திற்கு ஒத்துழைப்பு அளித்தல்.
- சிறுவர் துஷ்பிரயோகங்களைத் தடுப்பதற்கு 'எடுக்கப்படவேண்டிய நடவடிக்கைகள் பற்றி, அரசாங்கத்திற்கு ஆலோசனை வழங்கல்.
- அவ்வாறு ஆளாவோர்களைப் பாதுகாப்ப தொடர்பான ஆலோசனைகளை அரசாங்கத்திற்கு வழங்கல்.
- துஷ்பிரயோகங்களிலிருந்து பாதுகாப்பதற்காகச் சிறுவர்களுக்குரிய உரிமைகளைப் பற்றியும், அதனைத் தடுப்பது பற்றியும் அவர்களுக்கு தெளிவு படுத்துதல்.
- சிறுவர் துஷ்பிரயோகங்களைத் தடுக்கும் கடமைகளுக்காகவும், அவ்வாறு பாதிக்கப்பட்டவர்களைப் பாதுகாப்பதற்காகவும், அவர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்குத் தேவையான சகல நடவடிக்கைகளை எடுத்தல், மற்றும் உரிய சந்தர்ப்பத்தில் அக்கடமைகளுக்காக உரிய அமைச்சுகள், மாகாணசபைகள், உள்ளூராட்சி மன்றங்கள், மாவட்ட மற்றும் பிரதேச செயலாளர்கள், அரச மற்றும் தனியார் துறை அமைப்புகளின் அறிவுறுத்தல்களை விசாரித்தல்
- சிறுவர் துஷ்பிரயோகங்களைத் தடுப்பதற்கான தேசியக் கொள்கையைப் பயனுள்ளவாறு, செயற்படுத்துவதற்குத் தேவையான சட்டம், நிருவாகம் அல்லது ஏனைய திருத்தங்களை சிபாரிசு செய்தல்
- சகல விதமான சிறுவர் துஷ்பிரயோகங்களுக்குரிய சட்டங்களைச் செயற்படுத்தலும், வழி காட்டலும்.
- சிறுவர் துஷ்பிரயோகம் மற்றும் சகல ஆய்வுகள், குற்றவியல் வழக்குகள் தொடர்பான, முன்னேற்றத்தை வழிநடாத்தல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிராம மட்டத்தில் சிறுவர் துஷ்பிரயோகங்களைத் தடுப்போம்.



சிறிமல் பீரிஸ்

**சிறுவர் துஷ்பிரயோகம் இலங்கையில் இன்று கிராம மட்டத்திலும் ஒரு பிரச்சினையாக உள்ளது. சிறுவர்கள் தமது பிள்ளைப் பருவத்தில் சமூகத் தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியாமையே என அனேக ஆய்வாளர்கள் கூறுகின்றனர். எனவே சிறுவருக்கு அவர்களது நேரத்தைக் கழிப்பதற்கேற்ற சூழலை உருவாக்கி அளிப்பது எமது கடமையாகும்.**

அனேக பிள்ளைகள் பெற்றோர்களின் பாதுகாப்பை இழந்துள்ளனர். தொழிலுக்காக வெளிநாடு செல்லல், இடம்பெயர்தல் மாத்திரமல்லாது, பிரச்சினைகள் காரணமாகப் பெற்றோர் பிரிந்திருப்பதும் காரணம் எனக்கூறலாம். இவ்வாறானவர்களில் எமது கவனத்தை செலுத்துதல் முக்கியம் இதற்கான மாற்று வேலைத்திட்டமொன்றைச் செயற்படுத்த வேண்டும். அதற்காகச் சமூகத்தை வலுப்படுத்த வேண்டும் அதே போன்று. எமது கலாச்சாரத்தில் சிறுவர் ஊழியம் தொடர்பு வழமையாகவே உள்ளது. இதன் மூலம், இதற்கான மாற்று வழிகளையும் பெற்றோரை இழந்துள்ள பாதுகாப்பற்ற தன்மையை அகற்ற முயற்சிக்க வேண்டும்.

சிறுவர் துஷ்பிரயோகம் எனும் பிரச்சினைகள் அநேகமாக உரிய காலத்திற்கு முன் பாடசாலை விட்டு விலகியவர்களாலேயே ஏற்படுகின்றன. இதுவும் துஷ்பிரயோகமேயாகும். அதே போல சிறுவரின் ஊதியத்தைக் கொள்ளையடித்தலுமாகும். அதேபோல பாலியல் வற்புறுத்தலுக்கும் ஆளாகலாம். இதனால் பாடசாலை செல்லும் வயதிலுள்ளவர்களைப் பாடசாலைக்கு அனுப்பமுயற்சி எடுப்பது எமது கடமையாகும். அதன் மூலம் சிறுவர் துஷ்பிரயோகத்தினைத் தடுக்க முடியும்.

சிறுவர் துஷ்பிரயோகம் இன்று பலதுறைகளில் செயற்படுகிறது. இதனுடன் நெருங்கிய தொடர்பு சிறுவர் உரிமைகளுக்குண்டு இதனால் சமுதாயம் சிறுவர் உரிமைகளைப் பற்றிப் புரிந்து கொள்வதற்கும், அதனைப் பாதுகாப்பதற்கும் கவனத்தைச் செலுத்துவது அத்திய அவசியமாகும். ●●●

### மனிதத் தன்மையான அவதானிப்பு

- ஆயுதமேந்தி, சச்சரவுகளுக்கு ஆளாகிய பிள்ளைகள் தொடர்பாக மனிதாபமான முறையில் கவனித்துலுக்காக எடுக்கவேண்டிய நடவடிக்ககசிபாரிசு செய்தல் அவர்களின் உடல் உள நலனுக்கான நடவடிக்கை உட்பட அவர்களின் பாதுகாப்பு, மற்றும் அவர்களை சமூகத்தில் சேர்த்துக்கொள்ளல்
- குற்றவியல் தொடர்பான விசாரணைகள், வழக்குகளுக்கு ஆளான பிள்ளைகளுக்குப் பாதுகாப்பு எடுப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுத்தல்.
- சிறுவர் துன்புறுத்தல் தொடர்பான மக்களின் முறைப்பாடுகளை ஏற்றுக் கொள்ளலும், தேவைப்படும் சந்தர்ப்பத்தில் உரிய அதிகாரிகளுக்குச் சமர்ப்பித்தல்.
- சிறுவர் துன்புறுத்தலுக்கு எதிரான திட்டங்களை இணைப்பது சம்பந்தமாக, மாகாண சபைகளுக்கும் உள்ளூராட்சி மன்றங்களுக்கும் அரச சார்பற்ற நிறுவனங்களுக்கும், ஆலோசனைகளையும் உதவியையும் வழங்குதல்.
- சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பாக தேசிய தரவுகளின் அடிப்படையில், தரவுகளைத் தயாரித்தலும், அதனைப் பேணுதலும்.
- உரிய அமைச்சு, மற்றும் ஏனைய நிறுவனங்களுடன் தொடர்பு கொண்டு, சிறுவர்களுக்குப் பாதுகாப்பு வழங்கும் சகல, சமய மற்றும் புனித நிறுவனங்களை மேர்பார்வை செய்தலும், வழிகாட்டலும்.
- சிறுவர் துன்புறுத்தல் மற்றும் பாதுகாப்பு தொடர்பான ஆய்வுகளை நடாத்துதல்.
- சிறுவர்களின் பாதுகாப்பு மற்றும் உரிமைகள் தொடர்பாகப் பொதுமக்களுக்குத் தகவல்கள் வழங்குதலும், கல்வியூட்டுதலும்.
- சிறுவர் துன்புறுத்தலுக்கான சந்தர்ப்பங்களைக் குறைத்தலுக்காக உல்லாசத்துறைப் பிரிவுகளுடன் தொடர்பு கொள்ளல்.
- சிறுவர் துன்புறுத்தல் தொடர்பான செயலமர்வுகள், மகாநாடுகள், ஒழுங்கு செய்தலும் அதற்கான வசதிகளைச் செய்து கொடுத்தலும்.
- சகல விதமான சிறுவர் துஷ்பிரயோகங்களை வெளிக் கொணர்தலும், மற்றும் தடுப்பது தொடர்பாக வெளிநாடுகள், சர்வதேச நிறுவனங்களுடன் தகவல்களைப் பரிமாறுதல். ●●●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறு வர்களைத் தவறான பாதையில் பாலியலில் ஈடுபடுத்து வது தொடர்பாக தெரிந்து கொள்ள வேண்டிய விடயங்கள



வளர்ந்தோர்கள், சிறுவர்களைத் தவறான வழியில் பாலியல் செயற்பாடுகளுக்குப் பயன்படுத்துவது, இன்றைய பாரிய பிரச்சினையாக உள்ளது. இவர்கள் பிள்ளைகளை மூன்று விதங்களிலே பயன்படுத்துகின்றனர்.

### *உடல் ரீதியாக அல்லாமல்*

உதாரணம், அவலட்சனமான முறையிலே, உடலைக் காட்சிப்படுத்தல், கெட்டவார்த்தைகளால் தொலைபேசியிலே பேசுதல் மற்றவர்களது, நிர்வாண, அரை-நிர்வாணமான நிலை-யை இரகசியாகப் பார்த்தல்.



### *உடல்ரீதியாக*

பாலுறுப்புகள் அல்லது வாய் மூலமாக உணர்ச்சிகளைத் தூண்டுதல், பாலுறுப்புகளை ஸ்பரிசஞ் செய்தலும் உடலுறவு கொள்ளலும்.

### *துன்புத்தல் ரீதியாக*

உதாரணமாகப் பலாத்கார முறையில் கற்பழித்தல், அ்டித்தல் அல்லது வேறு வழிகளின் துனஅபுறுத்தல் இது ஒரு தடவையோ அல்லது சிலவேளை அடிக்கடியும் ஏற்படலாம்.

இவ்வாறான துன்புறுத்-தல்களுக்கு எவ்வாறான வயதிலும், ஆண், பெண், ஆளாகலாம்.



சிறுவர்களைத் தவறான வழியிலே பாலியல் வல்லுறவில் ஈடுபடுத்துவது பற்றி நாம் அறிந்து கொள்ளவேண்டியது ஏன்? அது யாபேருக்கும் பொருத்தமாகும் விதம்.

- ✧ அதற்காளானோர் உடல், உளரீதியாகப் பாதிக்கப்படலாம்.
- ✧ உறவினர், நண்பர்களுடன் கோபிக்கலாம் அல்லது, பிரச்சினையை மூடிமறைத்துக் கொண்டு, தாமாகவே குறை கூறிக்கூறி இருக்கலாம்.
- ✧ சிறுவர் துஷ்பிரயோ-கமூலம் பாதிப்புற்ற குடும்பங்களின் துயரம், குற்றவியற் செயல்கள், போைப்பொருள் பாவனை ஆகியவற்றின் பாதிப்பை நாம் அனைவரும் தாங்கிக் கொண்டிருக்கிறோம்.

### *அதனைத் தடுப்பதற்கு நீங்கள் செய்ய வேண்டியவை பின் வருமாறு*

- ✧ சிறுவர் துன்புறுத்தல் தொடர்பான சரியான விளக்கங்களைப் பிள்ளைகளுக்கு வழங்குதல்.
- ✧ சுய பாதுகாப்பு பற்றி பிள்ளைகளுக்கு விளக்கமளித்தல்.
- ✧ ஏதேனும் விபரீதங்கள் தங்களுக்கு ஏற்பட்டால் அதனை மற்றவர்களிடம் கூறுவதற்குப் பிள்ளைகளுக்கு அறிவுரை வழங்கல்.
- ✧ சந்தேகம் ஏற்பட்டால் அதுபற்றி உரிய அதிகாரிகளுக்கு தெரிவிக்கவும் இவ்வாறான விடயங்கள் பற்றிய அறிவு தங்களுக்குப் போதிய அளவில் இருக்குமேயானால், பிள்ளைகளின் பாதுகாப்பினை அதிகரித்துக் கொள்ள வசதியாக இருக்கும்.

- ✧ பாலியல் துன்புறுத்தல்கள், எப்பிள்ளைகளுக்கும், எந்த இடத்திலும், எச்சந்தர்ப்பத்திலும் ஏற்படலாம்.
- ✧ பழக்கப்பட்ட இடங்கள், வீடு, அயல், பாடாசாலைக்குப் போய் வரும் போது,
- ✧ பிரசித்தமான இடங்களில் பூங்கா, விளையாட்டுமைதானம், படமாளிகை, ஓய்வு விடுதிகள்.
- ✧ பழக்கமற்ற, தனித்த இடங்களில் தனித இடங்கள், மரங்கள் சூழ்ந்த இடங்கள்.
- ✧ துன்புறுத்துவோர் அதிகாரத்தைப் பயன்படுத்தி அனாவசிய ஸ்பரிசங்களின் மூலம் பிள்ளைகளை இணங்க வைத்தல்.
- ✧ பரிசுப் பொருட்கள் வழங்குவதன் மூலம்

### *பாலியல்த் துன்புறுத்தல்களின் தாக்கம்*

இதற்காளானோரின் ஆளுமை சம்பவத்திற்கு ஏற்ப மாறுபடும்.

### *தற்காலிகமாக உளரீதியான பாதிப்புகளை உண்டு பண்ணல்*

- ✧ வெட்கம், பயம், தடுமாற்றம்
- ✧ பலிகூறல், நிராகரித்தல்
- ✧ வளர்ந்தோர்கள், அறிமுகமல்லாதவர் பற்றி சந்தேகம் சிலவேளை நடந்த நிகழ்வு தாக்கத்தை உண்டுபண்ணாமலுமிருக்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் பிரதிபலிப்பு தொடர்பாக பெற்றோர்கள் விழிப்பாக இருத்தல் வேண்டும்.

***மிகப் பயங்கர சந்தர்ப்பங்கள்***

பலாத்காரம், கற்பழிப்பு, பாரிய துன்புறுத்தல், போன்ற நீண்டகால தாக்கத்தை உண்டுபண்ணலாம்.

- ✧ நடத்தையில் மாற்றங்கள்
- ✧ தனித்திருக்க விரும்புதல்
- ✧ பாடசாலையில் சச்சரவுகள், தாக்கும் தன்மை சொல்லாமல் வெளியேறுதல்.
- ✧ இரவிலே கனவில் பயப்படுதல், சிந்தனை வயப்பட்டிருத்தல் அல்லது பல்வேறுபட்ட மனநோயால் பாதிப்புறல்
- ✧ காயங்கள், கீறல்கள், சமூக நோய்கள் கருத்தரித்தல் போன்ற உடல் ரீதியான பாதிப்புகள்
- ✧ இதனைப்பற்றி தெரியக்கூடிய அறிகுறிகள் பல வருடங்கள்





வரை தோன்றாமல் இருக்கலாம். சில சமயங்களில் பல வயதைக் கடந்த பின்பும் தோற்றலாம். விரைவாக அறிகுறிகள் காணப்படாத போதிலும் பாலியல் வல்லுறவினால் பாதிப்புற்ற பிள்ளைகளுக்கு உதவியளித்தல் வேண்டும்.

பிள்ளைகளை முறையற்ற பாலியல் செயற்பாடுகளில் ஈடுபடுவதைத் தடுப்பதற்காக, தன்னை பாதுகாத்துக்கொள்வது எவ்வாறு என்பதனைப் பிள்ளைகளுக்குக் கற்றுக் கொடுத்தல் வேண்டும்.

விபரம் தெரிந்த பிள்ளைகளுக்கு இந்தச் சட்டங்களைப் பின்பற்றச் செய்யவும்.

இச்சட்டங்கள் முக்கியமானது ஏன் என்பதை அவர்களுக்குப் புரியவைத்தல் வேண்டும். எதிர்பாராத விதத்தில் அவர்களிடமிருந்து முறைகேடான பலவைப் பெறுவதிலிருந்து தடைசெய்வதற்காகவே.


***பிள்ளைகளை முறையற்ற பாலியல் செயற்பாடுகளில் ஈடுபடுவதைத் தடுப்பதற்காக, தன்னை பாதுகாத்துக்கொள்வது எவ்வாறு என்பதனைப் பிள்ளைகளுக்குக் கற்றுக் கொடுத்தல் வேண்டும். விபரம் தெரிந்த பிள்ளைகளுக்கு இந்தச் சட்டங்களைப் பின்பற்றச் செய்யவும்.***



***விளிப்பாமிருங்கள்***

- ✧ பிறரின் நடத்தைகளை இனங்கண்டு கவனமாக இருப்பதற்கு வழிகாட்டுங்கள்.
- ✧ தாய் தந்தையினால் அனுப்பப்பட்டாவர் என்ற கூறும் அறிமுகமில்லாதவரை நம்பாதீர்கள்.

# *சிறுவர் துஷ்பிரயோகங்கள் எவை ?*




**பிள்ளைகளின் பேச்சுக்கு செவிசாய்க்கவும்.**



**எதிர்பார்க்கும் அன்பை வழங்காதிருத்தல்.**



**பிள்ளைகள் சுகதுக்கங்களைக் கவனியாதிருத்தல்.**




**பிள்ளைகளைப் பாடசாலைக்கு அனுப்புவதை தடுத்தல்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுவர்களைத . .

← 23

- பாலியல் ரீதியாக ஸ்பரிசம் செய்யக்கூடிய எவருடனும் தனிமையாக இருக்காதீர்கள்.
- அளவுக்கதிகமாக எவரையும் நம்பாதீர்கள் சந்தேகத்திற்கிடமான முறையில் நட்பைக் காட்டும் அறிமுமற்ற எவருடனும் பழகாதீர்கள் பரிசில்களைப் பெறாதீர்கள்.



உங்கள் உடலை எவரையேனும் ஸ்பரிசம் செய்ய அனுமதிக்காதீர்கள்.

**அவர்கள் அனுபவத்த, அல்லது பார்த்த, சந்தேகத்திடமான பாலியல் செயல்பற்றி. சந்தேகத்திற்கிடமான ஒருவரை நாடி, நண்பர் சென்றார். ஒருவருடன் தனிமையிலிருப்பது கடினமென தெரிந்தால். எவராவது ஒருவர் முறைகேடாக பாலியல் செயற்பாட்டில் ஈடுபட்டால், அவ்விடத்திலிருந்து விலகிக்க கொள்ளவும். எவரேனும் ஒருவர் பாலியல் வல்லுறவிற்குசித்தால், முடியாதென மறுத்து விலகவும். இது சம்பந்தமாக மற்றவர்களிடம் கூறுவதாக அவரை எச்சரிக்கவும்.**




**எப்போதும் பொறுப்புவாய்ந்த முதியோர்களை அனுகப் பிள்ளைகள் தெரிந்திருத்தல். சர்ச்சைக்குரிய சந்திப்புகளைப் பற்றி கலந்து ஆலோசிப்பதற்கு பிள்ளைகளுக்கு ஊக்கமளிக்கவும்**

**ஆபத்தான சந்தர்ப்பங்களைத் தவிர்க்கவும்**

பயனைப் பெறுவதிலிருந்து தடுக்கும் விரத்தை பிள்ளைகளுக்குக் கற்றுக் கொடுக்கவும்.

- தனித்த இடங்களிலே தனியாக விளையாட வேண்டாம்.



- பொது ஓய்வு விடுதிகளுக்குத் தனியாக்ச் செல்லாதீர்கள்.

எப்போதும் பொறுப்புவாய்ந்த முதியோர்களை அனுகப் பிள்ளைகள் தெரிந்திருத்தல்.

சர்ச்சைக்குரிய சந்திப்புகளைப் பற்றி கலந்து ஆலோசிப்பதற்கு பிள்ளைகளுக்கு ஊக்கமளிக்கவும்

- அவர்கள் அனுபவத்த, அல்லது பார்த்த, சந்தேகத்திடமான பாலியல் செயல்பற்றி.
- சந்தேகத்திற்கிடமான ஒருவரை நாடி, நண்பர் சென்றார்.
- ஒருவருடன் தனிமையிலிருப்பது கடினமென தெரிந்தால்.
- எவராவது ஒருவர் முறைகேடாக பாலியல் செயற்பாட்டில் ஈடுபட்டால், அவ்விடத்திலிருந்து விலகிக்க கொள்ளவும்.
- எவரேனும் ஒருவர் பாலியல் வல்லுறவிற்குசித்தால், முடியாதென மறுத்து விலகவும்.
- இது சம்பந்தமாக மற்றவர்களிடம் கூறுவதாக அவரை எச்சரிக்கவும்.
- மற்றவர்களின் உதவியை நாடுகள்
- கூடிய விரைவிலே நடந்த சம்பவத்தை முதிர்ந்தோரிடம் கூறவும்.
- சம்பவம் நடந்தது எவ்விடத்தில், எந்தத் தனத்தில் என்பதை ஞாபகத்தில் வைத்துக் கொள்ளவும்.
- பாலியல் வல்லுறவிற்கு ஆளாக்கப்பட்டிருந்தால் அதனை மனதில் வைத்து வேதனைப் படவேண்டாம் என அவர்களுக்குக் கூறவும் அவரிடம் பிழையில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org